பிரசங்கி - முன்னுரை

காலமும் இடமும்

பிரசங்கியின் புஸ்தகம் கி.மு. 1000 ஆம் வருஷத்தில் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

சாலொமோன். (பிர 1:1,12; பிர 2:7-9; பிர 12:9-10).

மையக்கருத்து

சாலொமோன் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போன காலத்தில் தன்னுடைய உபதேச வார்த்தைகளைப் பிரசங்கியின் புஸ்தகத்தில் கூறியிருக்கிறான். (பிர 1:3; பிர 2:10-22; பிர 3:18-22; பிர 7:23) செப்துவஜிந்த் பதிப்பில் இந்தப் புஸ்தகத்திற்கு "The Preacher" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்தப் புஸ்தகத்திற்குப் பெயராயிற்று. (பிர 1:1). பிரசங்கி என்பதற்குக் "கூட்டத்தைக் கூட்டுகிறவர் அல்லது கூட்டத்தில் பேசுகிறவர்" என்று பொருள்.

இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டதற்கான காரணம் வருமாறு:

1. உலகச்சிற்றின்பங்கள், பாவங்கள் ஆகியவை எல்லாம் மாயையே என்பதை விளக்குவது.
2. ஜீவியத்தின் மெய்யான முடிவை விளக்கிக் கூறுவது.
3. கர்த்தருக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் அவரோடு நித்தியகாலமாக ஜீவிக்கலாம் என்னும் சத்தியத்தை விளக்குவது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 12

வசனங்கள் - 222

கேள்விகள் - 33

கட்டளைகள் - 34

பொருளடக்கம்

I. அறிமுகமும் கருத்தும் (1:1-2)

II. மாயை - மனுஷனுடைய பிரயாசம்

1. மனுஷனுடைய பிரயாசங்களினால் பலனில்லை (1:3)
2. மனுஷனுடைய பிரயாசங்கள் மாறும் - என்றும் நிலைத்திருக்கும் நான்கு காரியங்கள் (1:4-7)
3. மனுஷனுடைய பிரயாசங்கள் திருப்தியடைவதில்லை (1:8)
4. மனுஷனுடைய பிரயாசங்கள் திரும்ப திரும்பச் செய்ய வேண்டும் (1:9-10)
5. மனுஷனுடைய பிரயாசங்களை விரைவில் மறந்து போவார்கள் (1:11)

III. மாயைகள் - பின்வாங்கிப்போன பிரசங்கியின் சொந்த அனுபவங்கள்

1. மாயை - எல்லா மனுஷருடைய பிரயாசங்கள் (1:12-14)
2. மாயை - ஞானம், அறிவு, பைத்தியம், மதியீனம் (1:15-18)
3. மாயை - சந்தோஷங்கள் (2:1-3)
4. மாயை - பெரிய வேலைகள் (2:4-6)
5. மாயை - ஐசுவரியங்களும், மகிமையும் (2:7-9)
6. மாயை - இச்சைகள் (2:10-11)
7. மாயை - ஞானமும், மதியீனமும் (2:12-17)
8. மாயை - நிலையில்லாத பிரயாசங்கள் (2:18-19)
9. மாயை - தகுதியில்லாத சுதந்தரவாளிகள் (2:20-21)
10. சொந்த பிரயோஜனங்களினால் பலனில்லை (2:22-23)
11. மாயை - ஒரு பாவி கடினமாக பிரயாசப்படுவது அவனுடைய ஜீவியத்திற்கு நியாயத்தீர்ப்பாகவே முடியும் - அவனுடைய பிரயாசங்கள் நல்லவன் வசமாகும் (2:24-26)

பிரசங்கி - முன்னுரை

IV. மனுஷனுடைய ஆயுசு நாள்

1. மனுஷவாழ்வில் எல்லாவற்றிற்கும் காலமுண்டு (3:1-8)
2. பிரயாசப்படுகிறவனிடம் கேட்கப்படும் கேள்வி (3:9)
3. ஜீவனும் மரணமும்
   - (1) மனுஷனுடைய பிரயாசமும் அறியாமையும் (3:10-11)
   - (2) ஆசீர்வாதங்களும் வாய்ப்புகளும் (3:12-13)
   - (3) மனுஷனுடைய ஜீவியத்தின் முடிவு (3:14-15)
   - (4) மனுஷனுடைய துன்மார்க்கமும் நியாயத்தீர்ப்பும் (3:16-17)
   - (5) மனுஷன் மிருகங்களைப் போல மரிக்கிறான் ஆனால் அவனுடைய ஆவி வேறு இடத்திற்குச் செல்லும் (3:18-21)
   - (6) பின்மாறுகிறவனுடைய முடிவு (3:22)

V. மாயைகள், ஆலோசனை, புத்திமதி

1. மாயை - மற்றவர்களால் ஒடுக்கப்படுவதும் மற்றவர்களுக்காக வேலைசெய்வதும் (4:1-4)
2. ஆலோசனை - சமாதானத்தோடு ஜீவிப்பது (4:5-6)
3. மாயை - கஞ்சனுடைய முடிவு (4:7-8)
4. ஆலோசனை - ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் (4:9-12)
5. மாயை - ஜீவியத்தில் நீதியோ சந்தோஷமோ இல்லை (4:13-16)
6. ஆலோசனை - ஞானத்தின் கிரியைகள், பொருத்தனைகள், நீதி ஆகியவற்றைப் பற்றிய ஆலோசனைகளின் பதினான்கு அம்சங்கள் (5:1-9)
7. மாயை - பண ஆசை (5:10)
8. ஆலோசனை - உன்னுடைய பிரயாசங்களின் பலனால் திருப்தியடைய வேண்டும் (5:11-12)
9. மாயை - மற்றவர்களுடைய ஐசுவரியம் உதவாது (5:13-17)
10. ஆலோசனை - உன் ஜீவியத்தின் எல்லா நாட்களிலும் உன் பிரயாசங்களின் பலனை அனுபவி (5:18-20)

VI. மாயைகளும் தீமைகளும்

1. மாயை - ஜீவியத்தில் பல ஆசீர்வாதங்களை அனுபவிக்க சக்தியில்லை (6:1-2)
2. மாயை - அநேகம் பிள்ளைகளை வளர்த்தாலும் முடிவில் தரித்திரனாக மரிப்பது (6:3-6)
3. மாயை - ஆசையும் ருசியும் ஒருபோதும் திருப்தியடையாது (6:7-9)
4. மாயை - ஜீவியத்தில் நன்மையானது எது என்பது பற்றிய கேள்விகள் (6:10-12)

VII. ஆலோசனையும் ஜீவியத்தில் நன்மையான காரியங்களும்

1. ஜீவியத்தில் எட்டு நன்மையான காரியங்கள்(7:1-8)
2. ஆலோசனையின் ஆறு அம்சங்கள் - காரணங்கள் (7:9-14)
3. அதிக நீதியுள்ளவனாக இருக்க வேண்டாம் - காரணம் (7:15-16)
4. அதிக துன்மார்க்கனாக இருக்க வேண்டாம் - காரணம் (7:17-18)
5. வலிமையில் நம்பிக்கை வைக்க வேண்டாம் - காரணம் (7:19-20)

பிரசங்கி - முன்னுரை

6. அதிகமாக உணர்ச்சிவசப்படக்கூடாது - காரணம் (7:21-22)

7. பின்மாற்றக்காரனிடம் காணப்படும் ஏழு காரியங்கள் (7:23-29)

VIII. மாயைகள், ஆலோசனை, புத்திமதி

1. ஆலோசனை - தேவனுக்கு முன்பாகவும், இராஜாவுக்கு முன்பாகவும் ஞானத்தோடு நடந்து கொள்வது (8:1-8)

2. மாயை - ஒடுக்கப்படுவதும் பாவங்களும் (8:9-10)

3. ஆலோசனை - பாவம் முடிவில் உதவாது (8:11-13)

4. மாயை - சமநிலையில்லாத வெகுமதிகள் (8:14)

5. ஆலோசனை - சொந்த பிரயாசத்தை அனுபவி (8:15)

6. மாயை - மனுஷனுடைய ஓயாத பிரயாசம் (8:16-17)

7. ஆலோசனை - மனுஷனை விட தேவனுக்கு அதிகம் தெரியுமென்றும் தேவன் சர்வவல்லவர் என்றும் நினைத்து திருப்தியாக இரு (9:1)

8. மாயை - எல்லோருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கும் (9:2-6)

9. ஆலோசனை - தேவன் அருளிய அநேக ஆசீர்வாதங்களை அனுபவி (9:7-10)

IX. ஞானமும், புத்தியீனமும்

1. ஞானத்திற்கு சமயில்லாமல் கொடுக்கப்படும் வெகுமதி (9:11-12)

2. வலிமையைவிட ஞானம் நலம் (9:13-18)

3. பேர்பெற்றவர்களின் புத்தியீனம் (10:1)

4. ஞானத்தை நடத்தையினால் அறிந்து கொள்ளலாம் (10:2-3)

5. ஞானம் வலிமையைவிட நலம் (10:4)

6. பேர்பெற்றவர்களிடம் புத்தியீனம் (10:5-7)

7. பிரயாசத்தைவிட ஞானம் நலம் (10:8-10)

8. ஞானியும் மூடரும் (10:11-15)

9. பேர்பெற்றவர்களிடம் புத்தியீனம் (10:16-20)

X. நல்ல ஆலோசனை

1. எல்லா மனுஷருக்கும் (11:1-3)

2. விவசாயிகளுக்கு ஆலோசனை (11:4-6)

3. வாலிபருக்கு ஆலோசனை

   (1) மற்றவர்களுடைய அனுபவங்களிலிருந்து ஆதாயம் (11:7-8)

   (2) வரப்போகும் நியாயத்தீர்ப்பை எதிர்பார்த்து ஜீவிக்க வேண்டும் (11:9-10)

   (3) தேவனை நினைக்கவேண்டும் - காரணங்கள் (12:1-2)

   (4) மரணம் உறுதியானது என்பதை நினைவு கூரவேண்டும் - மனுஷனுடைய சரீரம், மரணம் ஆகியவற்றின் பதினெட்டு அம்சங்கள் (12:3-7)

   (5) ஞானிகளின் வாக்கியங்களுக்கு செவி கொடுக்க வேண்டும் (12:8-12)

   (6) காரியத்தின் கடைசித் தொகை (12:13-14)

பிரசங்கி - தொகுப்புரை

1 அதிகாரம்

I. அறிமுகமும் கருத்தும் - (1:1-2)

பிர 1:1 தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள்.

பிர 1:2 மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

பிரசங்கி (Preacher) - קֹהֶלֶת - ko-heh'-leth - 6953

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரசங்கி (convener; to collect together, assemble; one who assembles a congregation) - (பிர 1:1-2,12; பிர 7:27; பிர 12:8-10, ரோமர் 10:14; 1தீமோ 2:7; 2தீமோ 1:11; 2பேதுரு 2:5). பிரசங்கம் பண்ணுதல் (நெகே 6:7; சங் 40:9, ஏசா 61:1; யோனா 3:2), சுவிசேஷ பிரசங்கியார் (மத் 4:17; மத் 10:7,27; மத் 11:1)

"பிரசங்கியின் வாக்கியங்கள்" - இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருப்பவை பிரசங்கியின் வாக்கியங்களாகும். இவை கர்த்தருடைய வாக்கியங்கள் அல்ல. இந்தப் புஸ்தகத்தை எழுதிய போது சாலொமோன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போன நிலைமையில் இருந்தான். சூரியனுக்குக் கீழே இருக்கும் மனுஷருக்கு வரும் பாடுகள், வேதனைகள், அதற்கான காரணங்கள், வாழ்க்கைத் தத்துவங்கள் ஆகியவற்றைக் குறித்து இந்தப் புஸ்தகத்தில் சாலொமோன் எழுதியிருக்கிறான்.

சாலொமோனின் பின்மாற்றம்

1. சிருஷ்டிப்பு, மானிடஜீவியம், பூமியிலுள்ளவை ஆகியவற்றைக் குறித்து சாலொமோன் எல்லாம் மாயை என்று கூறுகிறான். (பிர 1:2,14; 2:1,11,15,17, 19,21,23,26; 3:19; 4:4,8,16; 5:7,10; 6:2,9; 11:8,10)

2. "சூரியனுக்குக் கீழே" என்னும் வாக்கியம் மனுஷருடைய பொதுவான நிலைமையைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் சாலொமோன் ஏவப்பட்டு இந்த வாக்கியத்தை எழுதவில்லை. இவன் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போன நிலைமையில் இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும். (1இராஜா 11:1-10). சாலொமோனுக்கு 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். இவர்களைப் பற்றி பிர 7:26-28 ஆகிய வசனங்களில் கூறியிருக்கிறான். கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போகாதவர்களின் பிரசங்க வாக்கியங்கள் மத் 6:25-34; கொலோ 3:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

3. சாலொமோனுக்கு எல்லாம் வருத்தத்தில் நிறைந்திருக்கிறது. (பிர 1:8; பிர 4:8) அவன் எதிலும் திருப்தியடையாதவனாக இருக்கிறான். தேவனுடைய மனுஷனோ போதுமென்ற மனதோடு எதிலும் திருப்தியோடு இருப்பான். (சங் 22:26; சங் 36:8; பிலி 4:11; எபி 13:5).

4. சாலொமோன் தன்னுடைய மனதைத் தவறான காரியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்குப் பிரயோகம் பண்ணினான். (பிர 1:13,17; 2:1-3; 2:10,20; 7:25)

5. சாலொமோன் தன்னைப் பற்றி சுயபெருமையோடு உயர்த்திக் கூறுகிறான். (பிர 1:16; பிர 2:4-9).

6. சாலொமோன் தேவனைவிட்டு பின்வாங்கிப் போனபோதிலும் அவன் தன்னை இன்னும் பெரியவனாகவும், திரவிய சம்பன்னனாகவும், ஞானியாகவும் கருதுகிறான். (பிர 2:9).

7. சாலொமோன் தன் ஜீவனை வெறுக்கிறான். அவனுக்குத் தேவனிடத்தில் சமாதானம் இல்லை. (பிர 2:17). ஜீவனுள்ளோரைவிட மரித்துப் போனவர்கள் மேலானவர் என்பது அவனுடைய எண்ணம். (பிர 4:2-3).

பிரசங்கி - தொகுப்புரை

1 அதிகாரம்

8. சாலொமோன் தன் சுயத்தை அதிகமாக விரும்புகிறான். மற்றவர்களிடத்தில் அவன் அன்பு கூரவில்லை. தன் மரணத்திற்குப் பின்பு தன்னுடைய பிரயாசங்கள் மற்றவர்களுக்குப்போய்விடும் என்று வருத்தப்படுகிறான். (பிர 2:18-19).

9. பாவத்தைக் குறித்தும், ஜீவனைக் குறித்தும், சாலொமோன் கூறும் பிரசங்க வார்த்தைகள் கர்த்தருடைய சித்தத்திற்கு முரணாக உள்ளன. (பிர 2:1-3; 2:24-25; 3:22; பிர 8:15; பிர 9:7; பிர 10:19)

10. சாலொமோனின் உபதேசங்களில் பல ஆவிக்குரிய ஜீவியத்திற்கு எந்தப் பிரயோஜனமும் அற்றவையாகும். (பிர 1:9-10,11,13,15,18; பிர 3:15; பிர 7:13).

சாலொமோனின் தவறான ஆலோசனைகள்

1. எல்லாம் மாயை.

2. சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை. (பிர 1:9-10; பிர 3:15). ஆனால் தானியேலோ அறிவு பெருகிப் போகும் என்று கூறுகிறார். (தானி 12:4).

3. முன்னிருந்தவைகளைப் பற்றி ஞாபகமிராது என்று சாலொமோன் கூறுகிறான். (பிர 1:11). ஆனால் மனுஷனுடைய எல்லாக் கிரியைகளும் நினைவுகூரப்பட்டு அது அவர்களுக்கு நியாயம் தீர்க்கப்படும். (2கொரி 5:9-10; வெளி 20:11-15).

4. கோணலானதை நேராக்கக்கூடாது என்று சாலொமோன் கூறுகிறான். (பிர 1:15; பிர 7:13). கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இயேசு கிறிஸ்து கோணலானதை நேராக்குவதற்காக இந்த உலகத்திற்கு வந்தார். (ஏசா 40:4; ஏசா 42:16; ஏசா 45:2; லூக்கா 3:5)

5. அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு என்று சாலொமோன் கூறுகிறான். (பிர 1:18). ஞானத்தைத் தவறாகப் பயன்படுத்தினால், பல பிரச்சனைகள் உண்டாகும். அதே சமயத்தில் ஞானத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் ஆசீர்வாதம் உண்டாகும். (நீதி 1:5; நீதி 9:9). அறிவில் விருத்தியடைய வேண்டுமென்று புதிய ஏற்பாடு உபதேசம் பண்ணுகிறது. (2பேதுரு 1:1-10; 2பேதுரு 3:18).

6. மூடன் என்றாலும் ஞானி என்றாலும் என்றைக்கும் நினைவில் இருப்பதில்லை என்று சாலொமோன் கூறுகிறான். (பிர 1:11; பிர 2:16). ஆனால் இந்த வாக்கியம் வேதாகமத்தின் பொதுவான உபதேசத்திற்கு முரண் பட்டிருக்கிறது. (சங் 112:6; மல் 3:16; 2கொரி 5:9-10; வெளி 20:11-15).

7. ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாள் நல்லது என்று சாலொமோன் கூறுகிறான். (பிர 7:1). ஆனால் துன்மார்க்கர் மரித்தபின்பு, நரகத்திற்குப் போய் பாடுகளை அனுபவிப்பார்கள். (மத் 26:24; லூக்கா 16:19-31; ஏசா 14:9).

8. பூமியில் ஒரு நீதிமானும் இல்லை என்றும் சாலொமோன் கூறுகிறான். (பிர 7:20). ஆனால் இந்த வாக்கியம் வேதாகமத்தின் பொதுவான உபதேசத்திற்கு முரண் பட்டிருக்கிறது. (ரோமர் 5:1-11; ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13; 2கொரி 5:17-21;10:4-5; தீத்து 2:11-13; 1பேதுரு 2:21-22; 1யோவான் 1:7-9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 4:1-4,18)

பிரசங்கி - தொகுப்புரை

1 அதிகாரம்

சாலொமோன் "மாயை" என்று கூறுவது

1. மாயை, மாயை எல்லாம் மாயை *(பிர 1:2; பிர 12:8).*
2. எல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது. *(பிர 1:14; பிர 2:11,17,26; பிர 4:4,16; பிர 6:9).*
3. எல்லாம் மாயை *(பிர 1:2,14; பிர 2:17; பிர 3:19; பிர 12:8).*
4. அநேக மாயை *(பிர 5:7).*
5. இதுவும் மாயை *(பிர 2:1,15,19,21,23; பிர 4:4,8; பிர 5:10; பிர 6:2,9; பிர 7:6; பிர 8:10,14).*
6. மாயையான வேறொரு காரியம் *(பிர 4:7; பிர 6:4,11; பிர 7:15; பிர 8:14; பிர 9:9; பிர 11:8,10).*

சாலொமோன் கூறும் சத்தியங்கள்

1. நித்திய சந்ததிகள் *(பிர 1:4)*
2. என்றைக்கும் நிலைத்திருக்கும் பூமி *(பிர 1:4)*
3. சூரியன் சுற்றி வருவது *(பிர 1:6)*
4. காற்று சுழலன்று அடிப்பது *(பிர 1:6)*
5. நதிகளின் உற்பத்தியும், நீரோட்டமும் *(பிர 1:7)*
6. மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமாய் இருப்பது. *(பிர 2:13)*
7. எல்லாவற்றிற்கும் நியமிக்கப்பட்டிருக்கும் காலம். *(பிர 3:1-8)*
8. சிருஷ்டிப்பின் நேர்த்தி *(பிர 3:11)*
9. தேவன் மனுஷருடைய நியாயாதிபதியாக இருக்கிறார். *(பிர 3:17; பிர 5:7-8; பிர 11:9; பிர 12:14).*
10. மனுஷரும், மிருகங்களும் மரித்து மண்ணுக்குத் திரும்பும். *(பிர 3:19; பிர 6:6; பிர 12:7; ஆதி 2:7,19; ஆதி 3:19).*
11. மனுஷருடைய ஆவிகளும், மிருகங்களின் ஆவியும் மண்ணால் செய்யப் பட்டவையல்ல. இவை மரணத்தின்போது தேவனிடத்திற்குப் போகும். *(பிர 3:21; பிர 12:7).*
12. ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். *(பிர 4:9-12).*
13. மூடனாகிய ராஜாவைவிட ஞானியாகிய ஏழை மேன்மையானவன். *(பிர 4:13).*
14. பூமியில் விளையும் பலன் யாவருக்கும் உரியது. *(பிர 5:9).*
15. ஐசுவரியம் நிலையற்றது. *(பிர 5:12-15).*
16. பரிமளதைலத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தி மேன்மையானது. *(பிர 7:1).*
17. மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். *(பிர 9:5).*
18. பாதாளத்தில் அறிவும், ஞானமும் இல்லை. *(பிர 9:10).*

சாலொமோனின் நல்லாலோசனைகள்

1. நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள் *(பிர 5:1).*
2. மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம் *(பிர 5:1).*
3. தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; *(பிர 5:2).*

பிரசங்கி - தொகுப்புரை

1 அதிகாரம்

4. உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. (பிர 5:2).

5. நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே (பிர 5:4).

6. நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற் போவதைப்பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். (பிர 5:5).

7. உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே (பிர 5:6).

8. அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே. (பிர 5:6).

9. கர்த்தருக்குப் பயந்திரு. (பிர 5:6; பிர 8:12).

10. இடுக்கணானது ஞானியையும் பைத்தியக்காரனாக்கும்; பரிதானம் இருதயத்தைக் கெடுக்கும். (பிர 7:7).

11. உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங் கொள்ளாதே (பிர 7:9).

12. வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய் (பிர 7:14).

13. மிஞ்சின நீதிமானாயிராதே (பிர 7:16).

14. நீ உன்னை அதிக ஞானியாக்காதே (பிர 7:16).

15. மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே (பிர 7:17).

16. சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே (பிர 7:21).

17. ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட (பிர 8:2).

18. நீ ராஜாவின் சமுகத்தை விட்டுவிலகத் துரிதப்படாதே (பிர 8:3).

19. பொல்லாத காரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே (பிர 8:3).

20. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; (பிர 9:10).

21. அதிபதியின் கோபம் உன்மேல் எழும்பினால் உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே (பிர 10:4).

22. ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே (பிர 10:20).

23. உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய். (பிர 11:1).

24. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தை நீக்கிப்போடு. (பிர 11:10).

25. உன் மாம்சத்திலிருந்து தீங்கை நீக்கிப்போடு (பிர 11:10).

26. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள் (பிர 12:13-14).

மாயையான காரியங்கள்

1. எல்லாம் (பிர 1:2,14; பிர 2:11,17; பிர 3:19)

2. சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசங்களும் (பிர 1:3)

3. வருத்தத்தினால் நிறைந்திருக்கிற அனைத்துக் காரியங்களும் (பிர 1:8-11; பிர 3:15)

4. வானத்தின்கீழ் நடப்பவையெல்லாம். (பிர 1:13-14)

5. ஞானமும் அறிவும் (பிர 1:15-18)

6. மனுஷருடைய சந்தோஷம் (பிர 2:1-3)

7. மனுஷருடைய வேலைகள். (பிர 2:4-6)

1 அதிகாரம்

8. ஐசுவரியமும், மகிமையும் (பிர 2:7-9)

9. இச்சித்தவைகள். (பிர 2:10-11)

10. ஞானமும், பயித்தியமும், மதியீனமும் (பிர 2:12-17)

11. ஞானமாய் சாம்பாதித்த சகல வஸ்துக்களும் (பிர 2:18-19)

12. பிரயாசப்பட்டவை அனைத்தும். (பிர 2:20-21)

13. பிரயாசத்தினால் பலன் இல்லை. (பிர 2:22-23)

14. மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தொல்லை (பிர 2:24-26)

15. மனுஷருக்குத் தொடர்ந்து நிகழும் காரியங்கள். (பிர 3:1-22)

16. ஏழையை ஒடுக்குவது. (பிர 4:1-4)

17. கஞ்சனுடைய ஜீவன். (பிர 4:7-8)

18. நீதியின்மை (பிர 4:13-16)

19. பண ஆசை (பிர 5:10)

20. மற்றவர்கள் சேகரிக்கும் ஐசுவரியம் (பிர 5:13-17)

21. வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாமல் போவது. (பிர 6:1-2)

22. பெரிய குடும்பத்தை வளர்த்து ஒன்றுமில்லாமல் மரிப்பது. (பிர 6:3-6)

23. திருப்தியடையாத போஜன ஆசைகள். (பிர 6:7-9)

24. ஜீவனைக் குறித்த பல கேள்விகள். (பிர 6:10-12)

25. பாவமும், ஒடுக்கப்படுவதும். (பிர 8:9-10)

26. வித்தியாசமான வெகுமதிகள். (பிர 8:14)

27. மனுஷனுடைய ஒய்வில்லாத வேலை (பிர 8:16-17)

28. மனுஷருக்கு ஒரே விதமாய் சம்பவிப்பது (பிர 9:2-6)

29. ஜீவன் (பிர 11:8)

30. வாலிபமும், இளமையும் (பிர 11:9-10)

II. மாயை - மனுஷனுடைய பிரயாசம் - (1:3-11)

1. மனுஷனுடைய பிரயாசங்களினால் பலனில்லை

பிர 1:3 சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?

"பலன்" - தற்காலத்து சமுதாயத்தில் எல்லாக் காரியங்களும் லாபநஷ்டத்தை மனதில் வைத்தே நடைபெறுகிறது. மனுஷருடைய ஜீவனும் இதுபோலவே உள்ளது. உண்பது, குடிப்பது, சந்தோஷமாக இருப்பது, இருதயத்தின் இச்சைகளை நிறைவேற்றுவது ஆகியவை மட்டுமே மனுஷனுக்கு லாபமானவை என்று சாலொமோன் கூறுகிறான். (பிர 2:1-3; பிர 2:24-25; பிர 3:22; பிர 10:19; பிர 11:9). தன் வீட்டை ஆதரிப்பதற்காகவும் (1தீமோ 5:8), மற்றவர்களுக்கு உதவி புரிவதற்காகவும் (லூக்கா 6:38; கொலோ 1:10; 1தெச 4:11; 2தெச 3:10-12; 2தீமோ 2:21; தீத்து 3:1; எபி 6:10), கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகம் முழுவதற்கும் பரப்புவதற்காகவும் (மத் 28:19-20; மாற்கு 16:15-20; லூக்கா 24:47-51; அப் 1:4-8) ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும்.

2. மனுஷடைய பிரயாசங்கள் மாறும் - என்றும் நிலைத்திருக்கும் நான்கு காரியங்கள்

பிர 1:4 ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது.

1 அதிகாரம்

பிர 1:5 சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது; தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது.

பிர 1:6 காற்று தெற்கே போய், வடக்கேயுஞ்சுற்றி, சுழன்று சுழன்று அடித்து, தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும்.

பிர 1:7 எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.

நித்தியமாகக் கடந்து செல்பவை

1. நித்திய சந்ததிகள் (பிர 1:4)
2. சுற்றிவரும் சூரியன் (பிர 1:5)
3. சுழலன்று அடிக்கும் காற்று (பிர 1:6)
4. பாய்ந்தோடும் நதி (பிர 1:7)

"மறு சந்ததி வருகிறது" - பூமியில் ஜனங்கள் பிறந்துகொண்டே இருக்கிறார்கள். கர்த்தர் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தார். அதிலிருந்து மனுக்குலம் பலுகிப்பெருகி வருகிறது.

"பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" - பூமியில் சந்திரனும், சூரியனும், நட்சத்திரங்களும் மற்றும் கர்த்தர் சிருஷ்டித்த ஜீவனற்ற பௌதீக பொருட்கள் அனைத்தும் நித்திய காலமாக நிலைத்திருக்கும். கர்த்தர் பூமியின் ஆதாரங்களை ஸ்திரமாகப் போட்டிருக்கிறார். அது ஒருபோதும் நிலைபெயராது. (சங் 104:5).

என்றைக்கும் (for ever) - עוֹלָם - o-lawm', o-lawm' - 5769

ஆ.பெ.சொ. - என்றைக்கும், பூர்வம், நித்தியம், ஒருகாலும், எப்பொழுதும், என்றும் நீங்காத, ஒருபோதும், சதாகாலம், என்றும், எந்நாளும், அநாதி, ஆதிகாலம், வெகுகாலம், உலகம், ஏலாம், பழம், பழைய, முற்றிலும் **(time without mind; without any definite limits; eternal; everlasting; perpetual; eternity; forever and ever)** (பிர 1:4,10; பிர 2:16; பிர 3:11,14; பிர 9:6; பிர 12:5).

"சமுத்திரம் நிரம்பாது" - சமுத்திரத்திலுள்ள தண்ணீர்கள் சூரிய வெப்பத்தினால் ஆவியாக மாறிக்கொண்டே இருக்கிறது. அது வானத்திற்கு மேகமாகச் சென்று மறுபடியும் பூமிக்கு மழையாகப் பெய்கிறது. இது ஒரு சுழற்சியாக நடப்பதினால் சமுத்திரம் ஒருபோதும் நிரம்புவதில்லை.

3. மனுஷனுடைய பிரயாசங்கள் திருப்தியடைவதில்லை

பிர 1:8 எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; அது மனுஷரால் சொல்லி முடியாது; காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப் படுகிறதுமில்லை.

"எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது" - மனுஷருடைய அவயவங்கள் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. ஆகையினால் மனுஷருக்கு எல்லாமே வருத்தமாயிருக்கிறது.

4. மனுஷனுடைய பிரயாசங்கள் திரும்ப திரும்பச் செய்ய வேண்டும்

பிர 1:9 முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை.

பிர 1:10 இதைப்பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே.

1 அதிகாரம்

"முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்" - மனுஷன் தன்னுடைய வேலைகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறான். தான் ஜீவிப்பதற்கு ஆதாரமாக செய்ய வேண்டிய ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொரு மனுஷனும் இடைவிடாமல் செய்துகொண்டிருக்கிறான். மனுக்குலம் இருக்கும் வரையிலும் மனுஷருடைய வேலைகள் ஒய்வதில்லை. (பிர 1:9-10).

5. மனுஷனுடைய பிரயாசங்களை விரைவில் மறந்து போவார்கள்

பிர 1:11 முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை; அப்படியே பின்வரும் காரியங்களைப் பற்றியும் இனி மேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது.

"முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை" - ஏற்கெனவே நடந்த காரியங்களை மனுஷன் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து போவான். ஆனாலும் வரலாறு ஒருபோதும் மறைந்துபோவதில்லை.

III. மாயைகள் - மீன்வாங்கிப்போன பிரசங்கியின் சொந்த அனுபவங்கள் - (1:12-2:26)

1. மாயை - எல்லா மனுஷருடைய பிரயாசங்கள்

பிர 1:12 பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன்.

பிர 1:13 வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும் படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.

பிர 1:14 சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

"நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன்" - இந்த வாக்கியம் இவ்வாறு இறந்த காலத்தில் கூறப் பட்டிருப்பதினால் சாலொமோன் தற்போது எருசலேமில் ராஜாவாக இல்லை என்று பொருள்படாது. ஏனெனில் சாலொமோன் மரிக்கும் வரையிலும் எருசலேமிற்கு ராஜாவாக இருந்தான். (1இராஜா 11:41-43).

"கடும்" "மிகுந்த" "Sore" என்னும் வார்த்தையின் பயன்பாடு

1. கடுந்தொல்லை (பிர 1:13; பிர 4:8)
2. கொடிய தீங்கு (பிர 5:13,16)
3. கொடிய எரிபந்தப் பருக்கள் (உபா 28:35)
4. பெரிய வாதைகள் (உபா 28:59)
5. மிகவும் நெருக்கப்படுதல் (நியா 10:9; 1சாமு 28:15)
6. மிகவும் கலங்கியிருத்தல் (1சாமு 28:21)
7. மிகவும் காயப்படுதல் (1சாமு 31:3)
8. மிகவும் கடினமான யுத்தம் (2சாமு 2:17)
9. கொடிய பஞ்சம் (1இராஜா 18:2)
10. கொடிய பருக்கள் (யோபு 2:7)
11. உக்கிரம் (சங் 2:5)
12. மிகவும் வியாக்குலப்படுதல் (சங் 6:3,10)
13. மிகவும் நொறுக்கப்படுதல் (சங் 38:8)
14. வியாகுலம் (சங் 55:4)
15. மிகவும் பயப்படுதல் (ஆதி 20:8; யாத் 14:10)

பிரசங்கி - தொகுப்புரை

1 அதிகாரம்

16. மிகவும் தாகமடைதல் (நியா 15:18)

17. சத்தமிட்டு மிகவும் அழுதல் (நியா 21:2; எரே 13:17)

18. கடினமான யுத்தம் (1சாமு 14:52)

19. மகா சங்காரம் (எசே 21:10)

20. மிகவும் கொடிய நாசம் (மீகா 2:10)

21. மிகவும் பிரமித்தல் (மாற்கு 6:51; மாற்கு 14:33)

"தேவன்" - சாலொமோன் பிரசங்கியின் புஸ்தகத்தில் யெகோவா "Jehovah" "கர்த்தர்" என்னும் பெயரை ஒருதடவை கூட பயன்படுத்த வில்லை. எலோஹிம் என்னும் பெயரை மட்டுமே சாலொமோன் இந்தப் புஸ்தகத்தில் பயன்படுத்தியிருக்கிறான். யெகோவா என்பது கர்த்தருடைய உடன்படிக்கையின் நாமமாகும். சாலொமோன் பின்வாங்கிப் போவதற்கு முன்பாகக் கர்த்தருடைய நாமத்தை யெகோவா என்றும், எலோஹிம் என்றும் பயன் படுத்தியிருந்தான். (1இராஜா 1-11; 2நாளா 1-9) ஆனால் அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனபின்பு, எலோஹிம் என்னும் பெயரை மட்டுமே பயன்படுத்தியிருக்கிறான். சாலொமோன் இப்போது கர்த்தருடைய உடன்படிக்கையில் இல்லை.

தேவனைப் பற்றிய சத்தியம்

1. தேவன் மனுஷருக்குப் பல தொல்லைகளைத் தருகிறார். (பிர 1:13; பிர 2:10; ஆதி 3:17-19).

2. போஜனமும், குடிப்பதற்குப் பானமும் தருகிறார். (பிர 2:24; பிர 5:18-20; பிர 8:15).

3. மனுஷருக்கு ஞானமும், அறிவும், சந்தோஷமும் தருகிறார். (பிர 2:26).

4. பாவிகளுக்குத் தொல்லையைத் தருகிறார். (பிர 2:26).

5. நல்ல உணவு வகைகளைத் தருகிறார். (பிர 3:13).

6. ஐசுவரியங்களைத் தருகிறார். (பிர 5:19; பிர 6:2).

7. எல்லாக் காரியங்களையும் சிருஷ்டிக்கிறார். (பிர 3:11; பிர 7:13,29; பிர 8:17; பிர 11:5).

8. கர்த்தருடைய கிரியைகள் நித்தியமானவை. (பிர 3:14).

9. மனுஷர் தேவனைச் சேவிக்க வேண்டுமென்பதே அவருடைய கிரியைகளின் நோக்கம். (பிர 3:14).

10. எல்லாவற்றையும் விசாரிக்கிறார். (பிர 3:15,17; பிர 5:6; பிர 11:9; பிர 12:14).

11. மனுஷருடைய உள்ளத்தில் உணர்த்துகிறார். (பிர 3:18).

12. கர்த்தருக்கு ஒரு வீடு (தேவாலயம்) உள்ளது. (பிர 5:1).

13. மனுஷருடைய பொருத்தனை வார்த்தைகளைக் கவனிக்கிறார். (பிர 5:2-4).

14. மனுஷர் கர்த்தருக்குப் பயப்பட வேண்டும். (பிர 5:7; பிர 7:18; பிர 8:12-13; பிர 12:13).

15. நிறுத்துப்பார்ப்பதற்கு ஒரு தராசை நியமித்திருக்கிறார். (பிர 7:14).

16. கர்த்தரைப் பிரியப்படுத்துகிறவன் பாவத்திற்குத் தப்புவான். (பிர 7:18,26).

17. மனுஷர் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (பிர 8:2).

18. மனுஷருடைய கிரியைகள் கர்த்தருடைய கரத்தில் உள்ளது. (பிர 9:1,7).

19. மனுஷருடைய ஆவி தேவனிடத்திற்குத் திரும்பும். (பிர 12:7).

20. மனுஷன் தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். (பிர 12:13-14).

பிரசங்கி - தொகுப்புரை

1 அதிகாரம்

2. மாஷய - ஞானம், அறிவு, பைத்தியம், மதியீனன்

பிர 1:15 கோணலானதை நேராக்கக் கூடாது; குறைவானதை எண்ணிமுடியாது.

பிர 1:16 இதோ, நான் பெரியவனாயிருந்து, எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன்.

பிர 1:17 ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன்.

"கோணலானதை நேராக்கக்கூடாது" - தேவனுடைய உதவி இல்லையென்றால் மனுஷனால் கோணலானதை நேராக்க முடியாது. நியாயத்தீர்ப்பு நாளில் நாம் எல்லோரும் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும். ஆகையினால் அதற்கு முன்பாகவே நம்முடைய கோணலான காரியங்களைக் கர்த்தருடைய உதவியினால் நேராக்கிக் கொள்ள வேண்டும். (ஏசா 40:4; ஏசா 42:16; ஏசா 45:2; ஏசா 59:8; லூக்கா 3:5).

பைத்தியம் (madness) - הוֹלֵלוֹת - ho-lay-law' - 1947

பெண்பால் பெயர்ச்சொல் - பைத்தியம். **(silliness) folly** (பிர 1:17; பிர 2:3,12-13; பிர 10:1) **foolishness** (பிர 7:25; பிர 10:13). **(to shine; to make a show; to boast; to be clamorously foolish; to rave; to celebrate; to show or display loss of self-control; to rave with self - conceit) "madness"** (பிர 1:17; பிர 2:12; பிர 7:25; பிர 9:3; பிர 10:13).

மதியீனம் (folly) - סִכְלוּת - sik-looth', sik-looth' - 5531

பெ.பெ.சொ. - மதியீனம், மதிகேடு

2 அதிகாரம்

3. மாயை - சந்தோஷங்கள்

பிர 2:1 நான் என் உள்ளத்திலே சொல்லிக் கொண்டது என்னவென்றால்: வா, இப்பொழுது உன்னைச் சந்தோஷத்தினாலே சோதித்துப் பார்ப்பேன்; இன்பத்தை அநுபவி என்றேன்; இதோ, இதுவும் மாயையாயிருந்தது.

பிர 2:2 நகைப்பைக்குறித்து, அது பைத்தியம் என்றும், சந்தோஷத்தைக் குறித்து, அது என்ன செய்யும்? என்றும் சொன்னேன்.

பிர 2:3 வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அநுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும் பொருட்டும், என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக் கொண்டிருக்கும் போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக் கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக் கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகைதேடினேன்.

"என் உள்ளத்திலே சொல்லிக் கொண்டது" - பக்தியுள்ள மனுஷன் எவனும் இதுபோன்ற காரியங்களைத் தன் உள்ளத்தில் சொல்லிக் கொள்ளமாட்டான். ஆகையினால் இந்தப் புஸ்தகத்தை எழுதியபோது சாலொமோன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போயிருக்கிறான் என்பது தெரியவருகிறது.

சந்தோஷம் (mirth) - שִׂמְחָה - sim-khaw' - 8057

பெ.பெ.சொ. - சந்தோஷம், மகிழ்ச்சி, களிப்பு, பூரிப்பு, ஆனந்தம், மங்களகீதம், சிற்றின்பம், இன்பம், மகிழுதல் (glee; joy; mirth; pleasure) (பிர 2:1-2; பிர 7:4; பிர 8:15; ஆதி 31:27; நெகே 8:12; சங் 137:3; நீதி 14:13).

இன்பம் (pleasure) - טוֹב - tobe - 2896

வினைச்சொல் - இன்பம், பேசு "good" "pleasure" (பிர 2:1; யோபு 21:25) "merry" (பிர 9:7; நியா 16:25; 1சாமு 25:36; 2சாமு 13:28; 2நாளா 7:10; எஸ் 1:10; நீதி 15:15).

4. மாயை - பெரிய வேலைகள்

பிர 2:4 நான் பெரிய வேலைகளைச் செய்தேன்; எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத்தோட்டங்களை நாட்டினேன்.

பிர 2:5 எனக்காகத் தோட்டங்களையும் சிங்கார வனங்களையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன்.

பிர 2:6 மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சகிறதற்குக் குளங்களை உண்டு பண்ணினேன்.

பொதுவான வேலைகளும், தனி வேலைகளும்

1. வீடுகள் (பிர 2:4; 1இராஜா 6-7)
2. திராட்சத்தோட்டங்கள் (பிர 2:4)
3. தோட்டங்கள் (பிர 2:5)
4. சிங்கார வனங்கள்
5. மரங்கள்
6. குளங்கள் (பிர 2:6)

5. மாயை - ஐசுவரியங்களும், மகிமையும்

பிர 2:7 வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன்; வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள்; எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடுமாடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது.

பிரசங்கி - தொகுப்புரை

2 அதிகாரம்

பிர 2:8 வெள்ளியையும் பொன்னையும், ராஜசம்பத்தையும் மாகாணங்களிலுள்ளபொருள்களையும் சேகரித்தேன்; சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன்.

பிர 2:9 எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடேகூட இருந்தது.

சாலொமோனின் ஐசுவரியங்களும், மகிமையும்

1. வேலைக்காரர் (பிர 2:7).
2. வேலைக்காரிகள்
3. வேலைக்காரரின் பிள்ளைகள்
4. ஆடுமாடு முதலான திரண்ட ஆஸ்திகள்
5. வெள்ளியும், பொன்னும் (பிர 2:8)
6. ராஜசம்பத்தும் மாகாணங்களிலுள்ள பொருள்களும்
7. சங்கீதக்காரர்கள்
8. சங்கீதக்காரிகள்
9. பலவித வாத்தியங்கள்

"என் ஞானமும் என்னோடேகூட இருந்தது." - பரிசுத்த ஆவியானவர் மூலமாகச் சாலொமோனுக்குக் கிடைத்த ஞானமும், அறிவும் இன்னும் அவனைவிட்டு விலகவில்லை. கற்பதினாலும், அனுபவத்தினாலும் சம்பாதித்துக் கொண்ட ஞானத்தையும், அறிவையும் போல பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட ஞானமும், அறிவும் இன்னும் அவனோடுகூடவே இருக்கிறது. (பிர 2:3; 1கொரி 13; 1கொரி 14:3,12,26,32-38)

6. மாயை - இச்சைகள்

பிர 2:10 என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை; நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன்.

பிர 2:11 என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை.

"என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை" - சாலொமோன் தன் கண்களின் இச்சையையும், இருதயத்தின் ஆசைகளையும் பூர்த்தி செய்தான். ஒன்றையும் விலக்கவில்லை. (பிர 2:10-11).

சாலொமோனின் பாவங்கள்

1. ஞானத்தை அறிகிறதற்கு அவன் தன் மனதைப் பிரயோகம் பண்ணினான் (பிர 1:17).
2. பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கு அவன் தன் மனதைப் பிரயோகம் பண்ணினான்(பிர 1:17-2:1).
3. அவன் தன் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக்கொண்டிருக்க வகைதேடினான். (பிர 2:3).
4. மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்க அவன் தன் உள்ளத்தில் வகைதேடினான். (பிர 2:3).
5. வெள்ளியையும் பொன்னையும், ராஜசம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தான். (பிர 2:8).

பிரசங்கி - தொகுப்புரை

2 அதிகாரம்

6. தன் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் அவன் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை (பிர 2:10).

7. ஞானத்தையும், காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவும், மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறியவும் அவன் தன் மனதைச் செலுத்தினான். (பிர 7:25).

8. ஸ்திரீகளோடு அவனுக்குக் கசப்பான அனுபவம் ஏற்பட்டது. (பிர 7:28).

பிரசங்கியின் புஸ்தகத்தில் சாலொமோனின் பாவங்களாக இவையெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. இவை தவிர 1இராஜா 11:1-10 ஆகிய வசனங்களில் சாலொமோன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கி விக்கிரகாராதனை செய்ததும், அவன் பல பாவங்களைச் செய்ததும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது" - சாலொமோன் தன்னுடைய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றினான். ஆனாலும் அவனுக்குச் சஞ்சலமாகவே முடிந்தது. (பிர 2:10-11). அவன் விரும்பியது எதையும் அடையாமற்போனதில்லை. ஆனாலும் அவனுக்கு எதிலும் திருப்தி உண்டாகவில்லை. எல்லாமே அவனுக்கு மாயையாகத் தெரிகிறது. கர்த்தரைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டு பின்பு, அவரை மறுதலித்து, கர்த்தரைவிட்டு விலகிப்போகிறவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமும் தங்காது. எல்லாமே மாயையாகவும், சஞ்சலமாகவுமே இருக்கும். (2பேதுரு 2:20-22).

7. மாயை - ஞானமும், மதியீனமும்

பிர 2:12 பின்பு நான் ஞானமானது என்ன என்றும், பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் பார்த்து அறியும்படி திரும்பினேன்; ராஜாவுக்குப் பின்வரும் மனுஷன் என்ன செய்யக்கூடும்? செய்ததையே செய்வான்.

பிர 2:13 இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்.

பிர 2:14 ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது; மூடனே இருளிலே நடக்கிறான்; ஆகிலும் அவர்களெல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது என்று கண்டேன்.

பிர 2:15 மூடனுக்குச் சம்பவிக்கிறதுபோல எனக்கும் சம்பவிக்கிறதே; அப்படியிருக்க நான் அதிக ஞானமடைந்ததினால் காரியமென்ன என்று சிந்தித்தேன்; இதுவும் மாயை என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.

பிர 2:16 மூடன் என்றாலும் ஞானியென்றாலும் என்றைக்கும் நினைவில் இருப்பதில்லை; இப்பொழுது இருக்கிறதெல்லாம் வருங்காலத்தில் மறக்கப்பட்டுப்போம்; மூடன் எப்படிச் சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான்.

பிர 2:17 ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன்; சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கிரியையெல்லாம் எனக்கு விசனமாயிருந்தது; எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

"மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்" - இதுவரையிலும் சாலொமோன் தன்னுடைய அனுபவங்களைக் கூறிவிட்டு (பிர 2:12) இனிமேல் அந்த அனுபவங்கள் மூலமாகத் தான்கண்ட காரியங்களைக் கூறுகிறான். (பிர 2:13-17).

சாலொமோன் கண்டவை

1. இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டான்.

2. ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது; மூடனே இருளிலே நடக்கிறான்; ஆகிலும் அவர்களெல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது என்று கண்டான். (பிர 2:14).

பிரசங்கி - தொகுப்புரை

2 அதிகாரம்

3. மூடனுக்குச் சம்பவிக்கிறதுபோல ஞானிக்கும் சம்பவிக்கிறதைக் கண்டான். (பிர 2:15-16)

சாலொமோன் வெறுத்த காரியங்கள்

1. இந்த ஜீவனை வெறுத்தான். (பிர 2:17)
2. சூரியனுக்குக்கீழே தான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தான். (பிர 2:18-19)

8. மாயை - நிலையில்லாத பிரயாசங்கள்

பிர 2:18 சூரியனுக்குக்கீழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன்; எனக்குப் பின்வரப்போகிறவனுக்கு அதை நான் வைத்துப்போகவேண்டியதாகுமே.

பிர 2:19 அவன் புத்திமானாயிருப்பானோ, மூடனாயிருப்பானோ அதை யார் அறிவார்? ஆகிலும் சூரியனுக்குக்கீழே நான் பிரயாசப்பட்டு ஞானமாய்ச் சம்பாதித்த சகல வஸ்துக்களின் பேரிலும் அவன் அதிகாரியாவான்; இதுவும் மாயையே.

9. மாயை - தகுதியில்லாத சுதந்தரவாளிகள்

பிர 2:20 ஆகையால் சூரியனுக்குக்கீழே நான் பட்ட எல்லாப் பிரயாசத்தின் மேலுமுள்ள ஆசையை விட்டுவிட வகைபார்த்தேன்.

பிர 2:21 ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்; ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிட வேண்டியதாகும்; இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது.

10. சொந்த பிரயோஜனங்களினால் பலனில்லை

பிர 2:22 மனுஷன் சூரியனுக்குக்கீழே படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுடைய இருதயத்தின் எண்ணங்களினாலும் அவனுக்குப் பலன் என்ன?

பிர 2:23 அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது, அவன் வேலைகள் வருத்தமுள்ளது; இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலில்லை; இதுவும் மாயையே.

தனி மனுஷனின் மாயைகள்

1. மனுஷன் சூரியனுக்குக்கீழே படுகிற எல்லாப் பிரயாசங்கள்
2. மனுஷன் சூரியனுக்குக்கீழே படுகிற அவனுடைய இருதயத்தின் எண்ணங்கள்
3. அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது (பிர 2:23)
4. அவன் வேலைகள் வருத்தமுள்ளது.
5. இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலில்லை.

11. மாயை - ஒரு பாவி கடினமாக பிரயாசப்படுவது அவனுடைய ஜீவியத்திற்கு நியாயத் தீர்ப்பாகவே முடியும் - அவனுடைய பிரயாசங்கள் நல்லவன் வசமாகும்

பிர 2:24 மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்.

பிர 2:25 என்னைப்பார்க்கிலும் சம்பிரமமாய்ச் சாப்பிடத்தக்கவன் யார்? என்னைப்பார்க்கிலும் துரிதமாய்ச் சம்பாதிக்கத்தக்கவன் யார்?

பிரசங்கி - தொகுப்புரை

2 அதிகாரம்

பிர 2:26 தேவன் தமது பார்வைக்கு நல்லவனாய் இருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்; பாவஞ் செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

"மனுஷன் புசித்துக் குடித்து" - இந்த வசனத்தில் சாலொமோன் மனுஷன் புசிக்கும் சாதாரண போஜனத்தையும், பருகும் சாதாரண பானத்தையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். மனுஷன் போஜனம் செய்து தனக்கும், தன்னுடைய குடும்பத்திற்கும் நன்மை செய்து, பிறருக்கும் உதவி புரிந்து, தேவனுடைய ஊழியத்திற்கும் ஒத்தாசையாக இருக்க வேண்டும். மதுபானவெறியும், பெருந்தீனியும் மனுஷருக்குத் தகாதவையாகும்.

தேவன் நீதிமானுக்குத் தரும் ஆசீர்வாதங்கள்

1. ஞானம்
2. அறிவு
3. இன்பம்

பாவம் செய்கிறவனுக்குக் கர்த்தர் தொல்லையை நியமித்திருக்கிறார்.

3 அதிகாரம்

IV. மனுஷனுடைய ஆயுசு நாள் - (3:1-22)

1. மனுஷவாழ்வில் எல்லாவற்றிற்கும் காலமுண்டு

பிர 3:1 ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.

பிர 3:2 பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு;

பிர 3:3 கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு;

பிர 3:4 அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு; புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு;

பிர 3:5 கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு; தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு;

பிர 3:6 தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு; காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு;

பிர 3:7 கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு; மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு;

பிர 3:8 சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு; யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு.

வெவ்வேறு காலங்கள்

1. பிறக்க (பிர 3:2; ஆதி 18:14; ஆதி 21:2)
2. இறக்க (பிர 3:2; எபி 9:27)
3. நட (பிர 3:2; ஆதி 8:22; மத் 15:13)
4. நட்டதைப் பிடுங்க
5. கொல்ல (பிர 3:3; ஆதி 2:17)
6. குணமாக்க (பிர 3:3; மாற்கு 11:22-24; யோவான் 10:10; யோவான் 14:12-13; யோவான் 15:7; யாக் 5:14-16)
7. இடிக்க
8. கட்ட
9. அழ (பிர 3:4; யாக் 4:7-10)
10. நகைக்க (பிர 3:4; சங் 2:4)
11. புலம்ப (பிர 3:4; மத் 5:4; மத் 9:15)
12. நடனம்பண்ண (பிர 3:4; சங் 149:3; சங் 150:4)
13. கற்களை எறிந்துவிட (பிர 3:5)
14. கற்களைச் சேர்க்க
15. தழுவ
16. தழுவாமலிருக்க
17. தேட (பிர 3:6)
18. இழக்க
19. காப்பாற்ற (பிர 3:6; லூக்கா 8:15; 2தீமோ 1:14)
20. எறிந்துவிட (பிர 3:6; பிர 11:1)
21. கிழிக்க (பிர 3:7)
22. தைக்க
23. மவுனமாயிருக்க
24. பேச

பிரசங்கி - தொகுப்புரை

3 அதிகாரம்

25. சிநேகிக்க (பிர 3:8; 1கொரி 13; 2பேதுரு 1)

26. பகைக்க

27. யுத்தம் பண்ண (பிர 3:8; 2கொரி 10:4-5; எபே 6:10-18)

28. சமாதானம்பண்ண (பிர 3:8; ரோமர் 5:1; எபே 4:1-3)

2. பிரயாசப்படுகிறவனிடம் கேட்கப்படும் கேள்வி - (1:3-11)

பிர 3:9 வருத்தப்பட்டுப் பிரயாசப் படுகிறவனுக்கு அதினால் பலன் என்ன?

பிரயோஜனத்தைப் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகள்

1. இந்த சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு? (ஆதி 25:32)

2. நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன? (ஆதி 37:26)

3. அவரை நோக்கி ஜெபம் பண்ணுவதில் நமக்குப் பிரயோஜனம் என்ன? (யோபு 21:15)

4. நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன? பலன் என்ன? (யோபு 35:3)

5. நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? (சங் 30:9)

6. சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? (பிர 1:3)

7. வருத்தப்பட்டுப் பிரயாசப்படுகிறவனுக்கு அதினால் பலன் என்ன? (பிர 3:9)

8. அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன? (பிர 5:16)

9. அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? (மல் 3:14)

10. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36)

11. விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன? (ரோமர் 3:1)

12. நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவு உண்டாக்குவதற்காவது, தீர்க்க தரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன? (1கொரி 14:6)

13. ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்கு பிரயோஜனமென்ன? (யாக் 2:14)

14. சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (யாக் 2:16)

பிரயோஜனமற்ற காரியங்கள்

1. வீணனான காரியங்கள் - விக்கிரகங்கள். (1சாமு 12:21)

2. துன்மார்க்கம் (சங் 10:2)

3. கோபாக்கினை நாளில் ஐசுவரியம் (நீதி 11:4)

4. சுயநீதியும், கிரியைகளும் (ஏசா 57:12)

5. பொய்வார்த்தைகள் (எரே 7:8)

பிரசங்கி - தொகுப்புரை

3 அதிகாரம்

6. பொய்யும், மாயையும் (எரே 16:19)
7. நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்து (கலா 5:2)
8. வீணான மார்க்க விவாதங்கள் (2தீமோ 2:14)
9. விசுவாசமில்லாத சுவிசேஷம் (எபி 4:2)

பிரயோஜனமுள்ள காரியங்கள்

1. நீதி (யோபு 35:8)
2. பிரயாசங்கள் (நீதி 14:23)
3. தேவனுடைய உபதேசம் (ஏசா 48:17)
4. சுவிசேஷப் பிரசங்கம் (1கொரி 10:33)
5. ஆவிக்குரிய வரங்கள் (1கொரி 12:1-7)
6. தேவபக்தி (1தீமோ 4:8)
7. தேவனுடைய வார்த்தை (2தீமோ 3:16-17)
8. சிட்சை (எபி 12:10)
9. கிருபை (எபி 12:10)

3. ஜீவனும் மரணமும்

(1) மனுஷனுடைய பிரயாசமும் அறியாஷமயும்

பிர 3:10 மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன்.

பிர 3:11 அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்.

"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" - கர்த்தருடைய சிருஷ்டிகள் அனைத்தும் நேர்த்தியாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. அவர் லூசிபரைக்கூட நேர்த்தியாகவே சிருஷ்டித்தார். (எசே 28:11-17).

(2) ஆசீர்வாதங்களும் வாய்ப்புகளும்

பிர 3:12 மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்.

பிர 3:13 அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்து தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

"புசித்துக் குடித்து" - பிரமாணத்தின் எல்லைகளுக்கு உட்பட்டு, போஜனம் பண்ணுவதும், பானம் பண்ணுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். பெருந்தீனியும், மதுபானமும் மனுஷருக்குத் தகாது. (லூக்கா 21:34) குடிகாரர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1கொரி 6:9-10; கலா 5:21).

(3) மனுஷனுடைய ஜீவியத்தின் முடிவு

பிர 3:14 தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார்.

பிர 3:15 முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது; நடந்ததையோ தேவன் விசாரிப்பார்.

3 அதிகாரம்

"தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்" - மனுஷரைக்குறித்த தேவனுடைய திட்டம் நிலையானது. (அப் 15:18) கர்த்தருக்கு மனுஷருக்குச் சுயாதீன சித்தத்தைக் கொடுத்திருக்கிறார். மனுஷர் எடுக்கும் தீர்மானங்களைப் பொறுத்து அவர்களைக் குறித்த கர்த்தருடைய திட்டமும் மாறும். தேவனுடைய வார்த்தைக்கு மனுஷன் சுயாதீனமாகக் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிந்தால் மனுஷனுக்கு இரட்சிப்பும், ஆசீர்வாதமும் உண்டு. கீழ்ப்படியவில்லை யென்றால் மனுஷனுக்குக் கிடைப்பது நித்திய அழிவு. (மாற்கு 16:15-16; யோவான் 3:16; 1தீமோ 2:4-5; 2பேதுரு 3:9; வெளி 22:17). தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதங்களையும், கீழ்ப்படியாதவர்களுக்குச் சாபங்களையும் கர்த்தர் கூட்டிக்கொண்டே போகிறார். (வெளி 13:12; 2பேதுரு 1:4-9).

"நடந்ததையோ தேவன் விசாரிப்பார்" - (மத் 16:27; 2கொரி 5:9-20; வெளி 20:11-15).

(4) மனுஷனுடைய துன்மார்க்கமும் நியாயத்தீர்ப்பும்

பிர 3:16 பின்னும் சூரியனுக்குக்கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதிஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது.

பிர 3:17 சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.

"நியாயஸ்தலத்தைக் கண்டேன்" - சாலொமோன் நியாயஸ்தலத்தில் அநியாயத்தைக் காண்கிறான். தேவனே நீதியானவர். அவரே நியாயந்தீர்ப்பார். (பிர 3:16-17; மத் 16:27; அப் 17:31; 2கொரி 5:9-10; வெளி 20:11-15).

"சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" - கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியாக இருக்கும். (மத் 10:40-42; மத் 16:27; ரோமர் 14:10; 2கொரி 5:9-10).

(5) மனுஷன் மிருகங்களைப்போல் மரிக்கிறான் ஆனால் அவனுடைய ஆவி வேறு இடத்திற்குச் செல்லும்

பிர 3:18 மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப் போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் காணும்படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலைமையைக் குறித்து என் உள்ளத்தில் எண்ணினேன்.

பிர 3:19 மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப்பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மாயையே.

பிர 3:20 எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது.

பிர 3:21 உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?

"மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப் போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் காணும் படிக்கு" - மனுஷர் மிருகங்களைப் போல மரித்து மண்ணுக்குத் திரும்புகிறார்கள். (பிர 3:19-20) அதுமட்டுமல்லாமல் மனுஷரும் மிருகங்களைப் போலவே நடத்தையிலும், இச்சையிலும் வேறுபட்டிருக்கிறார்கள்.

பிரசங்கி - தொகுப்புரை

3 அதிகாரம்

"மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்" - மனுஷன் சாபத்தில் இருக்கிறான். பாவத்தின் சம்பளமாகிய மரணம் மனுஷனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால் மிருகங்களைப் போலவே மனுஷனும் மரித்துப்போகிறான். ஒருதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. (எபி 9:27).

மிருகங்களும் மரித்துப்போகின்றன. இந்த மரணம் அவைகளுடைய பாவத்தின் சம்பளமாக வரவில்லை. ஆனாலும் மரங்கள், தாவர வகைகள்போல மிருகங்களும் மரித்துப் போகின்றன. புதிய பூமியிலும் அவைகள் பலிகளாக மரிக்கும். (ஏசா 66:22-24; எசே 40-48)

மனுஷருடைய போஜனத்திற்காகவே மிருகங்கள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. (1தீமோ 4:1-8). மனுஷன் மாத்திரமே நித்திய ஜீவனை ஜீவிக்கும்படியாக சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறான். ஆனாலும் பாவம் மனுஷனுக்கு மரணத்தை உண்டாகிற்று. (1கொரி 15:24-28). ஆயிரம் வருஷ அரசாட்சியில் பாவம் செய்கிற மனுஷனுக்கு மட்டுமே மரணம் தண்டனையாகக் கொடுக்கப்படும். (ஏசா 65:20-25). புதிய பூமியில் ஒருவரும் பாவம் செய்வதில்லை. ஆகையினால் ஒருவரும் மரித்துப் போவதில்லை. (வெளி 21:3-7; வெளி 22:3). கர்த்தர் பூமியிலே மனுஷரைப் பலுகிப்பெருகுங்கள் என்று சொன்ன வாக்கியம் அப்போது நிறைவேறும்.

மனுஷன் பாவத்தில் விழுந்தாலும் தேவனுடைய திட்டம் மாறவில்லை. அவருடைய திட்டம் நிறைவேறுவதில் காலதாமதமாயிற்று. பூமியில் சாபம் இல்லாமல் இருந்தால் எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட நிலைமை புதிய பூமியில் இருக்கும். மனுஷன் மரிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு தேவன் அவனை சிருஷ்டிக்கவில்லை. அவன் பாவம் செய்யாமல் இருந்திருந்தால் மனுஷனுக்கு மரணமே நேரிட்டிருக்காது. (1கொரி 15:24-28; எபே 1:10)

மனுஷர் உயிர்த்தெழுந்த பின்பு, அவர்கள் மறுரூபமான சரீரத்தைப் பெற்றுக் கொள்வார்கள். (1கொரி 15:34-54; பிலி 3:20-21=லூக்கா 24:39). மறுரூபமான சரீரத்தில் இருக்கிறவர்கள் இனிமேல் ஒருபோதும் மரிக்கமாட்டார்கள்.

"எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது" - எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. இது சரீரத்தை மாத்திரமே குறிக்கும். மிருகங்களின் ஆவியும் மண்ணுக்குத் திரும்புகிறது. ஆனால் மனுஷருடைய ஆவியோ உயரே ஏறுகிறது. (பிர 3:21).

(6) பின்மாறுகிறவனுடைய முடிவு - (5:18-20; 7:1-29; 9:2-6; 11:9-10; 12:13-14)

பிர 3:22 இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன்; இதுவே அவன் பங்கு; தனக்குப் பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப் பண்ணுகிறவன் யார்?

"மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மை இல்லை" - கர்த்தர் ஒவ்வொரு மனுஷனையும் நியாயந்தீர்ப்பார். நீதிமான்கள் நன்மையைப் பெற்றுக் கொள்வார்கள். துன்மார்க்கர் ஆக்கினையை அடைவார்கள்.

4 அதிகாரம்

V. மாயைகள், ஆலோசனை, புத்திமதி - (4:1-5:20)

1. மாயை - மற்றவர்களால் ஒடுக்கப் படுவதும் மற்றவர்களுக்காக வேலைசெய்வதும்

பிர 4:1 இதற்குப் பின்பு நான் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தேன்; இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை; ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலம் இருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை.

பிர 4:2 ஆதலால் இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்கியவான்கள் என்றேன்.

பிர 4:3 இவ்விருதிறத்தாருடைய நிலைமையைப்பார்க்கிலும் இன்னும் பிறவாதவனுடைய நிலைமையை வாசி; அவன் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளைக் காணவில்லையே.

பிர 4:4 மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

சந்தோஷம் ஒழிந்துபோவதற்குக் காரணம்

1. ஒடுக்கப்படுதல் (பிர 4:1-4)
2. தனிமையும், தவறான பழக்கவழக்கங்களும் (பிர 4:7-8)
3. அநீதியும், ஏழ்மையும் (பிர 4:13-16)
4. மற்ற மாயைகள் (பிர 5:10,13-15; பிர 6:1-12).

சாலொமோன் கண்டவை

1. ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீர்
2. ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் இருந்த பெலம்.
3. ஒடுக்கப்படுகிறவர்களுக்கு தேற்றுவாரில்லாமல் இருப்பது.
4. மனுஷர்படும் எல்லாப் பிரயாசம் (பிர 4:4)
5. அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிற கிரியைகள்

"முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்கியவான்கள்" - ஒடுக்கப்படுகிறவர்களின் கண்ணீரின் நிமித்தமாகவும் அயலானுடைய பொறாமையின் நிமித்தமாகவும் சாலொமோன் உயிரோடு இருப்பவர்களைவிட மரித்தவர்களைப் பாக்கியவான் என்கிறான். பிறந்திருக்கிறவனை விட இன்னும் பிறவாமல் இருக்கிறவன் சாலொமோனுடைய பார்வையில் பாக்கியவானாக இருக்கிறான். (பிர 4:2-3).

2. ஆலோசனை - சமாதானத்தோடு ஜீவிப்பது

பிர 4:5 மூடன் தன் கைகளைக் கட்டிக் கொண்டு, தன் சதையையே தின்கிறான்.

பிர 4:6 வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம்.

பிரசங்கி புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நல்மனை காரியங்கள்

1. புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பது பிரயாசப் படுதலைவிட மேன்மையானதாகும். (பிர 2:22-24; பிர 5:15).

பிரசங்கி - தொகுப்புரை

4 அதிகாரம்

2. பின்வரும் காரியங்களைக் குறித்து கவலைப்படுவதை விட தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருப்பது நன்மையாக இருக்கும். (பிர 3:22).

3. உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களே பாக்கியவான்கள். (பிர 4:1-2).

4. உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் விட இன்னும் பிறவாதவனுடைய நிலைமையை வாசி (பிர 4:3).

5. வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம். (பிர 4:6).

6. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் (பிர 4:9-12).

7. ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப்பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி. (பிர 4:13).

8. நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற் போவதைப்பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். (பிர 5:5).

9. ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்குப் பிரேதக்கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப்பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி (பிர 6:3).

10. ஆசையானது அலைந்துதேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம் (பிர 6:9).

11. பரிமளதைலத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தி நல்லது. (பிர 7:1).

12. ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாள் நல்லது. (பிர 7:1).

13. விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம் (பிர 7:2).

14. நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; (பிர 7:3).

15. ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்து கொள்ளுதலைக் கேட்பது நலம். (பிர 7:5).

16. ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது. (பிர 7:8).

17. பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன். (பிர 7:8).

18. செத்த சிங்கத்தைப்பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி. (பிர 9:4-5).

19. பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம் (பிர 9:16).

20. யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம் (பிர 9:18).

3. மாயை - கஞ்சனுடைய முடிவு

பிர 4:7 பின்பு நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே மாயையான வேறொரு காரியத்தைக் கண்டேன்.

பிர 4:8 ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான் அவனுக்கு உடனாளியுமில்லை, அவனுக்குப் பிள்ளையும் சகோதரனுமில்லை; அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்துக்கு முடிவில்லை; அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதுமில்லை; நான் ஒரு நன்மையையும் அநுபவியாமல் யாருக்காகப் பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறதுமில்லை; இதுவும் மாயை, தீராத தொல்லை.

4 அதிகாரம்

"ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான்" - கஞ்சத்தனம் பண்ணுகிறவன் எப்போதும் தனிமையாக இருப்பான். மற்றவர்களோடு சேர்ந்து இருப்பது அவனுக்குத் திருப்தியாக இராது. "அவனுக்கு உடனாளியுமில்லை" என்பதற்கு அவன் தனிமையாகவே இருக்கிறான் என்று பொருள். தனிமையாக இருக்க வேண்டுமென்பது அவனுடைய தெரிந்தெடுப்பு. இவன் எந்த நன்மையும் அனுபவிப்பதில்லை. மாயையாகவே பிரயாசப்படுகிறான். (பிர 4:7-8).

4. ஆலோசனை ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்

பிர 4:9 ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும்.

பிர 4:10 ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே.

பிர 4:11 இரண்டுபேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாய் இருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி?

பிர 4:12 ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.

ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் என்பதற்கு காரணம்

1. அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். (பிர 4:9).
2. ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான் (பிர 4:10).
3. இரண்டு பேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும் (பிர 4:11).
4. ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம் (பிர 4:12).

5. மாயை - ஜீவியத்தில் நீதியோ சந்தோஷமோ இல்லை

பிர 4:13 இனி ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப் பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி.

பிர 4:14 அரசாளச் சிறைச் சாலையிலிருந்து புறப்படுவாருமுண்டு; ராஜாங்கத்தில் பிறந்து ஏழையாவாருமுண்டு.

பிர 4:15. சூரியனுக்குக்கீழே ஜீவனுள்ளோர் யாவரும் ராஜாவின் பட்டத்திற்கு வரப்போகிற பிள்ளையின் பட்சத்தில் சார்ந்திருப்பதைக் கண்டேன்.

பிர 4:16 அவர்களுக்குமுன் அப்படிச் செய்த ஜனங்களின் இலக்கத்திற்கு முடிவில்லை; இனி இருப்பவர்கள் இவன்மேலும் பிரியம் வைக்காமற் போவார்கள்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

"ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜா" - ஜனங்களை ஒடுக்குவதற்காக ராஜா தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறான். (பிர 4:13-14).

5 அதிகாரம்

6. ஆலோசனை - ஞானத்தின் கிரியைகள், பொருத்தனைகள், நீதி ஆகியவற்றைப் பற்றிய ஆலோசனைகளின் பதினான்கு அம்சங்கள்

பிர 5:1 நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்.

பிர 5:2 தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.

பிர 5:3 தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறது போல, வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும்.

பிர 5:4 நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய்.

பிர 5:5 நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்.

பிர 5:6 உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?

பிர 5:7 அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு.

பிர 5:8 ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதையும் நீ காண்பாயானால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதே; உயர்ந்தவன்மேல் உயர்ந்தவன்காவலாளியாயிருக்கிறான்; அவர்கள் மேல் உயர்ந்தவரும் ஒருவருண்டு.

பிர 5:9 பூமியில் விளையும் பலன் யாவருக்குமுரியது; ராஜாவும் வயலின் பலனால் ஆதரிக்கப்படுகிறான்.

சாலொமோனின் கட்டளைகள்

1. நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள் (பிர 5:1).
2. மூடர் பலியிடுவது போலப் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம்.
3. தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலிரு. (பிர 5:2).
4. மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமல் இரு.
5. உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.
6. நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே (பிர 5:4-5).
7. உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே (பிர 5:6).
8. அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே.
9. ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப் படுகிறதை நீ காண்பாயானால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதே. (பிர 5:8).

5 அதிகாரம்

10. ஒரு தேசத்தில் நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதை நீ காணபாயானால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதே (பிர 5:8).

“பூமியில் விளையும் பலன் யாவருக்குமுரியது” - பூமியில் போதுமான அளவு விளைச்சல் உள்ளது. இதை மனுஷருக்குச் சீராகப் பங்கிட்டுக் கொடுத்தால் எல்லோருக்கும் போதுமான அளவு உணவு கிடைக்கும். மீதமும் இருக்கும். இயேசு கிறிஸ்து மறுபடியும் இந்தப் பூமிக்கு வரும்போது அப்போதிருக்கும் பொருளாதாரத்தில் சுயநலம் இராது. பூமியில் தாராளமான விளைச்சல் உண்டாயிருக்கும். பஞ்சம் இராது. எல்லோருக்கும் குடியிருப்பதற்கு வீடுகள் இருக்கும். ஒவ்வொருவருக்கும் தங்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்குத் தேவையான பொருளாதார ஆதரவு இருக்கும். (ஏசா 2:2-4; ஏசா 65:20-25; மீகா 4; சக 3:10).

7. மாயை - பண ஆசை - (1தீமோ 6:10)

பிர 5:10 பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே.

மாயை

1. பொன், வெள்ளியின்மீதுள்ள ஆசை.
2. செல்வப்பெருக்கினால் உண்டாகும் ஆசை.

8. ஆலோசனை - உன்னுடைய பிரயாசங்களின் பலனால் திருப்தியடைய வேண்டும்

பிர 5:11 பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன?

பிர 5:12 வேலைசெய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும்; செல்வனுடைய பெருக்கோ அவனைத் தூங்கவொட்டாது.

9. மாயை - மற்றவர்களுடைய ஐசுவரியம் உதவாது

பிர 5:13 சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு; அதாவது, ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்.

பிர 5:14 அந்த ஐசுவரியம் விக்கினத்தால் அழிந்து போகிறது; அவன் ஒரு புத்திரனைப் பெறுகிறான், அவன் கையில் யாதொன்றும் இல்லை.

பிர 5:15 தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை.

பிர 5:16 அவன் வந்தபிரகாரமே போகிறான், இதுவும் கொடுமையான தீங்கு; அவன் காற்றுக்குப் பிரயாசப் பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன?

பிர 5:17 அவன் தன் நாட்களிலெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறான்.

“ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்” - ஒருசில ஐசுவரியவான்கள் ஏழைகளை ஒடுக்கி அநியாயமாகப் பொருளைச் சேகரிப்பார்கள். இவர்களுடைய அநியாயத்தினால் இவர்களுக்கு விரோதிகளும் கூடிவிடுவார்கள். அநியாயமாகச் சேர்த்த ஐசுவரியம் அழிந்துபோகும். (பிர 5:13-14). தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான். (பிர 5:15) இவனுக்கு ஒரு லாபமும் உண்டாவதில்லை. இவனுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்ப்போகும். (பிர 5:16). தன் வாழ்நாள் முழுவதும் புசித்துக் குடிக்கிறான். இறுதியில் மரிக்கிறான். (பிர 5:17).

5 அதிகாரம்

10. ஆலோசனை - உன் ஜீவியத்தின் எல்லா நாட்களிலும் உன் பிரயாசங்களின் பலனை அனுபவி

பிர 5:18 இதோ, உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே அவன் பங்கு.

பிர 5:19 தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

பிர 5:20 அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம் பண்ணுகிறபடியினால், அவன் தன் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையான்.

"இதுவே அவன் பங்கு" - மனுஷன் புசிப்பதும், குடிப்பதும் தேவனுடைய பிரமாணத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். தன்னுடைய சரீர ஆரோக்கியத்திற்காக மனுஷன் புசிக்கலாம். பெருந்தீனி உண்டு தன் சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்துப்போடக்கூடாது. அளவுக்கு அதிகமாகப் புசிப்பதினாலும், குடிப்பதினாலும் மனுஷனுடைய சரீரமும், ஆத்துமாவும் அழிந்துபோகும். மனுஷனுடைய சரீரம் தேவனுடைய ஆலயமாக இருக்கிறது. இந்த ஆலயத்தை ஒருவன் கெடுத்தால் தேவன் அவனை அழிப்பார். (1கொரி 3:16-17; 1கொரி 6:19-20; 2கொரி 7:1; கலா 5:19-22; கொலோ 3:5-10). கட்டுப்பாட்டோடு ஜீவிக்கிறவனுக்கு சந்தோஷமும், தேவனுடைய அநுக்கிரகமும் உண்டாகும். (பிர 5:19-20).

6 அதிகாரம்

VI. மாயைகளும் தீமைகளும் - (6:1-12)

1. மாயை - ஜீவியத்தில் பல ஆசீர்வாதங்களை அனுபவிக்க சக்தியில்லை

பிர 6:1 சூரியனுக்குக் கீழே நான் கண்டவேறொரு தீங்குமுண்டு; அது மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிறது.

பிர 6:2 அதாவது, ஒருவனுக்கு தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அநுபவிக்கும் சக்தியை தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை; அந்நிய மனுஷன் அதை அநுபவிக்கிறான்; இதுவும் மாயையும், கொடிய நோயுமானது.

2. மாயை - அநேகம் பிள்ளைகளை வளர்த்தாலும் முடிவில் தரித்திரனாக மரிப்பது

பிர 6:3 ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்குப் பிரேதக்கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப்பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்கிறேன்.

பிர 6:4 அது மாயையாய்த் தோன்றி இருளிலே மறைந்துபோய்விடுகிறது; அதின்பேர் அந்தகாரத்தால் மூடப்படும்.

பிர 6:5 அது சூரியனைக் கண்டதுமில்லை, ஒன்றையும் அறிந்ததுமில்லை; அவனுக்கு இல்லாத அமைச்சல் அதற்கு உண்டு.

பிர 6:6 அவன் இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையையும் காண்பதில்லை; எல்லாரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள் அல்லவா?

“அவனுக்குப் பிரேதக்கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால்” - சாலொமோன் ஒரு மனுஷனைக் குறித்து இங்கு குறிப்பிடுகிறான். அவன் நூறு பிள்ளைகளைப் பெற்றவன். அநேகம் வருஷம் ஜீவித்தவன். தீர்க்காயுசை அடைந்தவன். ஆனாலும் அவன் செல்வத்தினால் திருப்தியடையவில்லை. அவனுக்குப் பிரேதக்கல்லறையும் இல்லை. இப்படிப்பட்டவனுடைய ஜீவியத்தில் பிள்ளைகளும், தீர்க்காயுசும் மெய்யான ஆசீர்வாதங்களல்ல. சாலொமோன் இந்த மனுஷனைப் பார்க்கிலும் “கருவழிந்த பிண்டம் வாசி” என்று குறிப்பிடுகிறான். (பிர 6:6; பிர 3:19-21).

3. மாயை - ஆசையும் குசியும் ஒருபோதும் திருப்தியடையாது

பிர 6:7 மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை.

பிர 6:8 இப்படியிருக்க, மூடனைப் பார்க்கிலும் ஞானிக்கு உண்டாகும் மேன்மை என்ன? ஜீவனுள்ளோருக்கு முன்பாக நடந்து கொள்ளும்படி அறிந்த ஏழைக்கும் உண்டாகும் மேன்மை என்ன?

பிர 6:9 ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம்; இதுவும் மாயையும், மனதைச் சஞ்சலப் படுத்துகிறதுமாயிருக்கிறது.

4. மாயை - ஜீவியத்தில் நன்மையானது எது என்பது பற்றிய கேள்விகள்

பிர 6:10 இருக்கிறவன் எவனும் தோன்று முன்னமே பேரிடப்பட்டிருக்கிறான்; அவன் மனுஷனென்று தெரிந்திருக்கிறது; தன்னிலும் பலத்தவரோடே போராட அவனால் கூடாது.

6 அதிகாரம்

பிர 6:11 மாயையைப் பெருகப்பண்ணுகிற அநேக விசேஷங்கள் உண்டாயிருக்கிறபடியால் அதினாலே மனுஷருக்குப் பிரயோஜனமென்ன?

பிர 6:12 நிழலைப்போன்ற மாயையான தன் ஜீவகாலத்தைப் போக்கும் மனுஷனுக்கு இந்த ஜீவனில் நன்மை இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப்பின்பு சூரியனுக்குக் கீழே சம்பவிக்குங்காரியம் இன்னதென்று மனுஷனுக்கு அறிவிப்பவன் யார்?

7 அதிகாரம்

VII. ஆலோசனையும் ஜீவியத்தில் நன்மையான காரியங்களும் - (7:1-29)

1. ஜீவியத்தில் எட்டு நன்மையான காரியங்கள்

பிர 7:1 பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாளும் நல்லது.

பிர 7:2 விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான்.

பிர 7:3 நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்;

பிர 7:4 ஞானிகளின் இருதயம் துக்க வீட்டிலே இருக்கும்; மூடரின் இருதயம் களிப்புவீட்டிலே இருக்கும்.

பிர 7:5 ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்.

பிர 7:6 மூடனின் நகைப்பு பானையின்கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பைப்போலிருக்கும்; இதுவும் மாயையே.

பிர 7:7 இடுக்கணானது ஞானியையும் பைத்தியக்காரனாக்கும்; பரிதானம் இருதயத்தைக் கெடுக்கும்.

பிர 7:8 ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்.

“மூடனின் நகைப்பு” - இது பானையின்கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்புக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. முள் வேகமாக எரியும். படபடப்பாக இருக்கும். ஆனால் விரைவில் அணைந்துபோகும். அதுபோலவே மூடனின் நகைப்பும் சத்தமாக இருந்தாலும் அது சீக்கிரத்தில் மறைந்துபோகும்.

2. ஆலோசனையின் ஆறு அம்சங்கள் - காரணங்கள்

பிர 7:9 உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்.

பிர 7:10 இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே; நீ இதைக் குறித்து கேட்பது ஞானமல்ல.

பிர 7:11 சுதந்தரத்தோடே ஞானம் நல்லது; சூரியனைக் காண்கிறவர்களுக்கு இதினாலே பிரயோஜனமுண்டு.

பிர 7:12 ஞானம் கேடகம், திரவியமும் கேடகம்; ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும்; இதுவே அறிவின் மேன்மை.

பிர 7:13 தேவனுடைய செயலைக் கவனித்துப் பார்; அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத் தக்கவன் யார்?

7:14 வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய்; மனுஷன் தனக்குப்பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்கு தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.

“இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது” - ஜனங்கள் எப்போதுமே தங்களுடைய கடந்தகால பசுமையான நினைவுகளை நோக்கிப் பார்க்கிறார்கள். தற்காலத்தைவிட முந்திய காலம் நன்றாக இருந்ததுபோன்று சிலர் நினைக்கிறார்கள். எல்லாக்காலமும் ஒன்றுதான். கர்த்தர் எல்லாக் காலத்திலும் மாறாதவராயிருக்கிறார். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இக்காலமே நமக்கு நல்ல காலமாகும்.

7 அதிகாரம்

ஞானத்தின் ஆசீர்வாதம்

1. மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமாயிருக்கிறது. (பிர 2:13).
2. இந்நாட்களைப்பார்க்கிலும் முன் நாட்கள் நலமாயிருந்தது என்று ஞானம் சொல்லாது. (பிர 7:10).
3. சுதந்தரத்தோடே ஞானம் நல்லது (பிர 7:11).
4. ஞானத்தினால் மனுஷனுக்கு பிரயோஜனமுண்டு.
5. ஞானம் பாதுகாப்பாக இருக்கும். (பிர 7:12).
6. ஜீவனைத்தரும்.
7. பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம். (பிர 7:19; பிர 9:16).
8. எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும். (பிர 7:23).
9. சந்தோஷத்தையும் தைரியத்தையும் தரும். (பிர 8:1).
10. யுத்தத்தில் விடுதலை பண்ணும். (பிர 9:15).
11. யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம். (பிர 9:18).
12. ஒரு காரியத்தைச் செவ்வையாய் செய்வதற்கு ஞானமே பிரதானம். (பிர 10:10).

3. அதிக நீதியுள்ளவனாக இருக்க வேண்டாம் - காரணம்

பிர 7:15 இவை எல்லாவற்றையும் என் மாயையின் நாட்களில் கண்டேன்; தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமானுமுண்டு, தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவியுமுண்டு.

பிர 7:16 மிஞ்சின நீதிமானாயிராதே, அதிக ஞானியுமாக்காதே; உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும்?

சாலொமோன் கண்டவர்கள்

1. தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமான்.
2. தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவி

சாலொமோன் ஆலோசனை

1. மிஞ்சின நீதிமானாயிராதே (பிர 7:16) நாம் தேவனுடைய கிருபையை மாத்திரமே சார்ந்திருக்க வேண்டும். நம்முடைய சுயநீதியில் நாம் நம்பிக்கை வைக்கக் கூடாது. விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய கிருபையினால் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். (தீத்து 2:11-13; எபி 12:14-15).
2. அதிக ஞானியாக்காதே (பிர 7:16). நம்முடைய கண்களில் நாம் ஞானியாக இருக்கக்கூடாது.
3. மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையாயிராதே (பிர 7:17).

4. அதிக துன்மார்க்கனாக இருக்க வேண்டாம் - காரணம்

பிர 7:17 மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே; உன் காலத்துக்கு முன்னே நீ ஏன் சாகவேண்டும்?

பிர 7:18 நீ இதைப் பற்றிக்கொள்வதும் அதைக் கைவிடாதிருப்பதும் நலம்; தேவனுக்குப் பயப்படுகிறவன் இவைகள் எல்லாவற்றினின்றும் காக்கப்படுவான்.

5. வலிமையில் நம்பிக்கை வைக்க வேண்டாம் - காரணம்

பிர 7:19 நகரத்திலுள்ள பத்து அதிபதிகளைப் பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும்.

7 அதிகாரம்

பிர 7:20 ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை.

6. அதிகமாக உணர்ச்சி வசப்படக்கூடாது - காரணம்

பிர 7:21 சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே; கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப்பட வேண்டியதாகும்.

பிர 7:22 அநேகந்தரம் நீயும் பிறரை நிந்தித்தாயென்று, உன் மனதுக்குத் தெரியுமே.

"சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே" - மற்றவர்களுடைய புறங்கூறும் வார்த்தைகளுக்கு அதிகக் கவனம் செலுத்தக்கூடாது. நம்மைப் பாதிக்கும் காரியங்களை அதிகமாகக் கேட்கவும் கூடாது. பிறரை நாம் நிந்திக்கவும் கூடாது. பிறர் நம்மை நிந்திக்கவும் இடம் தரக்கூடாது. (பிர 7:21-22).

7. பின்மாற்றக் காரனிடம் காணப்படும் ஏழு காரியங்கள்

பிர 7:23 இவை எல்லாவற்றையும் ஞானத்தினால் சோதித்துப்பார்த்தேன்; நான் ஞானவானாவேன் என்றேன், அது எனக்குத் தூரமாயிற்று.

பிர 7:24 தூரமும் மகா ஆழமுமாயிருக்கிறதைக் கண்டடைகிறவன் யார்?

பிர 7:25 ஞானத்தையும், காரண காரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவும், மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறியவும் என் மனதைச் செலுத்தினேன்.

பிர 7:26 கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய ஸ்திரீயானவள், சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று கண்டேன்; தேவனுக்கு முன்பாகச் சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான்; பாவியோ அவளால் பிடிபடுவான்.

பிர 7:27 காரியத்தை அறியும்படிக்கு ஒவ்வொன்றாய் விசாரணைபண்ணி, இதோ, இதைக் கண்டுபிடித்தேன் என்று பிரசங்கி சொல்லுகிறான்.

பிர 7:28 என் மனம் இன்னும் ஒன்றைத் தேடுகிறது, அதை நான் கண்டு பிடிக்கவில்லை; ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன்; இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை.

பிர 7:29 இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.

பின்வாங்கிப்போனவன் கண்டுபிடித்தவை

1. நான் ஞானவானாவேன் என்றேன், அது எனக்குத் தூரமாயிற்று. (பிர 7:23).
2. தூரமும் மகா ஆழமுமாயிருக்கிறதைக் கண்டடைவது மிகவும் கடினம். (பிர 7:24).
3. கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய ஸ்திரீயானவள், சாவிலும் அதிக கசப்புள்ளவள். . (பிர 7:26).
4. தேவனுக்கு முன்பாகச் சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான்.
5. பாவியோ அவளால் பிடிபடுவான்.
6. ஆயிரம்பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன்; இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை. (பிர 7:28).

7 அதிகாரம்

7. தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள் (பிர 7:29).

"என் மனதைச் செலுத்தினேன்" - கர்த்தரால் வழிநடத்தப்படுகிறவன் மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறிய தன் புத்தியைச் செலுத்தமாட்டான். ஆனால் சாலொமோனோ இப்போது கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போன நிலைமையில் இருக்கிறான்.

"உபாயதந்திரங்கள்" - பாவம் செய்யும் வழிகள். (பிர 7:25-29).

8 அதிகாரம்

VIII. **மாயைகள், ஆலோசனை, புத்திமதி** - (8:1-9:10)

1. **ஆலோசனை - தேவனுக்கு முன்பாகவும், இராஜாவுக்கு முன்பாகவும் ஞானத்தோடு நடந்து கொள்வது** - (10:1-20; நீதி 1:7,20-33)

பிர 8:1 ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார்? காரியத்தின் தாற்பரியத்தை அறிந்தவன் யார்? மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அவன் முகத்தின் மூர்க்கம் மாறும்.

பிர 8:2 ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட என்று நான் உனக்கு எச்சரிக்கிறேன்; நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படியே இதைச் செய்.

பிர 8:3 நீ அவன் சமுகத்தை விட்டுவிலகத் துரிதப்படாதே; பொல்லாத காரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே; அவன் தனக்கு இஷ்டமானதெல்லாம் செய்வான்.

பிர 8:4 ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு; நீர் என்ன செய்கிறீர் என்று அவனுக்குச் சொல்லத் தக்கவன் யார்?

பிர 8:5 கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான்; ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்.

பிர 8:6 எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு; ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி.

பிர 8:7 இன்னது சம்பவிக்கும் என்று அவன் அறியானே; அது இன்னவிதமாய்ச் சம்பவிக்கும் என்று அவனுக்குச் சொல்லத்தக்கவன் யார்?

பிர 8:8 ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை; அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை; துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது.

"மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்" - சாலொமோன் சூரியனுக்குக்கீழே பல காரியங்களைக் கவனித்துப் பார்க்கிறான். எல்லாம் மாயையாகவே அவனுக்குத் தெரிகிறது. அவற்றில் ஞானமே மனுஷனுக்குப் பிரயோஜனத்தைக் கொடுப்பதாகக் காண்கிறான். ஞானத்தின் ஒரு பகுதியைக் கர்த்தருக்கும், மனுஷருக்கும் கீழ்ப்படிவதோடு தொடர்புபடுத்துகிறான். மனுஷன் கீழ்ப்படிதல் உள்ளவனாக இருந்தால் அவனுக்குத் தீங்கு வராது. (பிர 8:1-5). பூமியிலுள்ள எல்லாக் காரியங்களுக்கும் ஒரு காலமுண்டு. ஒவ்வொரு காரியத்திற்கும் அதற்குரிய நியாயத்தீர்ப்பு பின்பு உண்டு. மனுஷனுக்கு என்ன சம்பவிக்கும் என்று அவனுக்கும் தெரியாது. அதை யாராலும் சொல்லவும் முடியாது. (பிர 8:6-7).

ஜீவியத்தின் முடிவுகள்

1. ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை.
2. மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை.
3. மரணத்தின் போருக்கு எந்த மனுஷனும் நீங்கிப் போவதுமில்லை.
4. துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்க மாட்டாது.

2. **மாயை - ஒடுக்கப்படுவதும் பாவங்களும்**

பிர 8:9 இவையெல்லாவற்றையும் நான் பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் எல்லாக் கிரியைகளையும் சிந்தித்தேன்; ஒரு மனுஷன் தனக்கே கேடுண்டாக வேறொரு மனுஷனை ஆளுகிற காலமுமுண்டு.

8 அதிகாரம்

பிர 8:10 பரிசுத்த ஸ்தலத்துக்குப் போக்குவரவு செய்த துன்மார்க்கர் அடக்கம் பண்ணப்பட்டதைக் கண்டேன்; அவர்கள் அப்படிச் செய்துவந்த பட்டணத்திலேயே மறக்கப்பட்டுப் போனார்கள்; இதுவும் மாயையே.

"ஒரு மனுஷன் தனக்கே கேடுண்டாக வேறொரு மனுஷனை ஆளுகிற காலமுமுண்டு" - மற்றவர்களை ஒடுக்குகிறதினால் ஒருபலனுமில்லை. தங்களுக்குக் கேடுண்டாகவே மற்றவர்களை ஒடுக்குகிறார்கள். பாவம் செய்தவர்களை ஜனங்கள் நினைவுகூராமல் மறந்துவிடுவார்கள். (பிர 8:10).

3. ஆலோசனை - பாவம் முடிவில் உதவாது

பிர 8:11 துர்க்கிரியைக்குத்தக்க தண்டனைசீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டிருக்கிறது.

பிர 8:12 பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.

பிர 8:13 துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படா திருக்கிறபடியால், நிழலைப்போலி ருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை.

"துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால்" - மனுஷனுடைய பாவத்திற்குக் கர்த்தர் உடடினயாகத் தண்டனையைக் கொடுக்கவில்லை. ஆகையினால் அவன் தெய்வபயமில்லாமல் தொடர்ந்து பாவம் செய்கிறான். பாவம் செய்தவுடன் அவனுக்குத் தண்டனை கிடைத்தால், மனுஷன் பாவம் செய்வதற்குப் பயப்படுவான்.

4. மாயை - சமநிலையில்லாத வெகுமதிகள்

பிர 8:14 பூமியின்மேல் நடக்கிற வேறொரு மாயையான காரியமுமுண்டு; அதாவது, துன்மார்க்கரின் கிரியைக்கு வருவது போல, நீதிமான்களுக்கும் வரும்; நீதிமான்களின் கிரியைக்கு வருவதுபோல, துன்மார்க்கருக்கும் வரும்; இதுவும் மாயை என்றேன்.

அநீதியான காரியங்கள்

1. துன்மார்க்கரின் கிரியைக்கு வருவது போல, நீதிமான்களுக்கும் வரும்.

2. நீதிமான்களின் கிரியைக்கு வருவதுபோல, துன்மார்க்கருக்கும் வரும்.

இது மனுஷனுடைய கருத்து. ஆனாலும் கர்த்தருடைய சித்தமே முக்கியமானது. துன்மார்க்கன் நித்திய அழிவில் பங்கு பெறுவான். நீதிமானோ நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வான்.

5. ஆலோசனை - சொந்த பிரயாசத்தை அனுபவி

பிர 8:15 ஆகையால் நான் களிப்பைப் புகழ்ந்தேன்; புசிப்பதும் குடிப்பதும் மகிழ்வது மேயல்லாமல் சூரியனுக்குக்கீழே மனுஷனுக்கு வேறொரு நன்மையும் இல்லை; சூரியனுக்குக்கீழே தேவன் அவனுக்குத் தந்த ஜீவகாலத்தில் அவன் பிரயாசத்தினால் அவனுக்கு நிலைக்கும் பலன் இதுவே.

"நான் களிப்பைப் புகழ்ந்தேன்" - சாலொமோன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போயிருப்பதினால் அவன் களிப்பைப் புகழுகிறான். புசிப்பதும், குடிப்பதும் அவனுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

8 அதிகாரம்

6. மாயை - மனுஷனுடைய ஓயாத பிரயாசம்

பிர 8:16 நான் ஞானத்தை அறியவும், மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் என் மனதைச் செலுத்தினபோது,

பிர 8:17 தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக் கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டேன்; அதைஅறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான்.

"பூமியிலே செய்யும் வேலைகள்" - சூரியனுக்குக்கீழே மனுஷன் செய்யும் வேலைகளைச் சாலொமோன் கவனித்துப் பார்க்கிறான். பலர் சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். தூங்காமலும், தங்கள் குடும்பத்தைக் கவனியாமலும் சிலர் வேலை செய்கிறார்கள். சாலொமோனுக்கு இதுஎல்லாமே மாயையாகத் தெரிகிறது.

"தேவன் செய்யும் சகல கிரியைகள்" - மனுஷன் பூமியிலே செய்யும் வேலைகளை மட்டுமே சாலொமோனால் பார்க்க முடியும். தேவன் செய்யும் சகல கிரியைகளையும் சாலொமோனால் பார்க்க முடியாது. மனுஷனை விட தேவனுக்கு அதிகம் தெரியுமென்றும், எல்லாக் காரியங்களையும் தேவனே ஆளுகை செய்கிறார் என்றும் மனுஷன் நினைவுகூர வேண்டும். நீதிமானின் காரியங்களும், துன்மார்க்கனின் காரியங்களும் கர்த்தருடைய கரத்தில் உள்ளன. (பிர 9:1).

9 அதிகாரம்

7. ஆலோசனை - மனுஷனை விட தேவனுக்கு அதிகம் தெரியுமென்றும் தேவன் சர்வவல்லவர் என்றும் நினைத்து திருப்தியாக இரு

பிர 9:1 இவை எல்லாவற்றையும் நான் என் மனதிலே வகையறுக்கும்படிக்குச் சிந்தித்தேன்; நீதிமான்களும் ஞானிகளும், தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கை வசமாயிருக்கிறார்கள்; தனக்குமுன் இருக்கிறவர்களைக் கொண்டு ஒருவனும் விருப்பையாவது வெறுப்பையாவது அறியான்.

"நீதிமான்களும் ஞானிகளும், தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கை வசமாயிருக்கிறார்கள்" - மனுஷனுக்கு இன்பமும், துன்பமும் வருகிறது. எல்லோருக்கும் ஒன்றுபோல் இவை வருவதற்குக் கர்த்தர் அனுமதிக்கிறார். நம்முடைய ஜீவியத்தில் நாம் எதை எதிர்பார்க்க வேண்டும் என்றே நமக்குத் தெரியாது. ஆகையினால் ஒவ்வொரு காரியத்தையும் நாம் கர்த்தருடைய கரங்களில் ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அவருடைய வழிகளையும் நாம் வேதவாக்கியங்களின் மூலமாக அறிந்து கொள்ளலாம். மனுஷனுக்குப் போராட்டமான காலங்கள் வரும்போது கர்த்தர் எவ்வாறு உதவிபுரிவார் என்பதை வேத வசனங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

8. மாயை - எல்லோருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கும்

பிர 9:2 எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; சன் மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலி யிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; நல்லவனுக்கு எப்படியோ

பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடுகிற வனுக்கும் ஆணையிடப் பயப்படுகிறவனுக்கும் சமமாய்ச் சம்பவிக்கும்.

பிர 9:3 எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது சூரியனுக்குக் கீழே நடக்கிறதெல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம்; ஆதலால் மனுபுத்திரரின் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது; அவர்கள் உயிரோடிருக்கும் நாளளவும் அவர்கள் இருதயம் பைத்தியங் கொண்டிருந்து, பின்பு அவர்கள் செத்தவர்களிடத்திற்குப் போகிறார்கள்.

பிர 9:4 இதற்கு நீங்கலாயிருக்கிறவன் யார்? உயிரோடிருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கையுண்டு; செத்த சிங்கத்தைப்பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி.

பிர 9:5 உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது.

பிர 9:6 அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப் படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை.

பிரசங்கி - தொகுப்புரை

9 அதிகாரம்

"எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்" - ஆனாலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்களுக்குக் கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், அனுக்கிரகமும்உண்டாகும்.துன்மார்க்கருடைய ஜீவியமும், நீதிமானின் ஜீவியமும் வித்தியாசமாக இருக்கும். (சங் 34:9-10; சங் 37:1-8; சங் 84:11; சங் 91:1-12; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; லூக்கா 18:1-8; யோவான் 14:12-14; யோவான் 15:7,16; யோவான் 16:23-26). கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போகிறவர்களுக்கு எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிப்பதுபோல தெரியும். மரித்த பின்பு மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு மிகப்பெரிய மாற்றம் உண்டாகும். துன்மார்க்கருடைய ஆத்துமா பாதாளத்திற்குப் போகும். நீதிமானுடைய ஆத்துமா பரலோகத்திற்குப் போகும். (பிர 9:2-3).

"எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது" - மரணமே எல்லோருக்கும் சம்பவிக்கப்போகிற காரியம். (பிர 3:19-21, பிர 9:5).

"உயிருள்ள நாய் வாசி" - யூதருக்கு நாய் ஓர் அருவருப்பான மிருகமாகும்.

"மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" - மரித்தோரின் சரீரங்கள் மட்டுமே ஒன்றும் அறியாது. அவர்களுடைய ஆத்துமாவும், ஆவியும் உணர்வோடு இருக்கும். மரித்தோர் உயிர்த்தெழும் வரையிலும் அவர்களுக்கு ஒரு மேன்மையும் இல்லை. ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பாக மரித்த நீதிமான்கள் உயிரோடு எழும்புவார்கள். (வெளி 20:4-6) ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு துன்மார்க்கர் தங்களுடைய ஆக்கினைத் தீர்ப்பை அடைவதற்காக உயிரோடு எழும்புவார்கள். (வெளி 20:11-15).

"எல்லாம் ஒழிந்து போயிற்று" - ஒருவனுடைய சரீரம் மரிக்கும்போது அவனுடைய ஆசை, கோபம், பொறாமை ஆகிய அனைத்துமே ஒழிந்துபோகும். உணர்வுகள் ஆத்துமாவிலும், ஞானமும், சித்தமும் ஆவியிலும் உள்ளன. மனுஷனுடைய மரணத்தின்போது ஆவியும், ஆத்துமாவும் அவனுடைய சரீரத்தைவிட்டுப் பிரிந்து போகிறது. (யாக் 2:26) அவர்கள் உயிர்த்தெழும்போது அவர்களுடைய சரீரத்தில் மறுபடியும் அன்பு, கர்த்தரைத் துதிப்பது போல மேலும் பல உணர்வுகள் மறுபடியும் உண்டாகும்.

9. ஆலோசனை - தேவன் அருளிய அநேக ஆசீர்வாதங்களை அனுபவி

பிர 9:7 நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார்.

பிர 9:8 உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக.

பிர 9:9 சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே.

பிர 9:10 செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.

"நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி" - எல்லோரும் பாவிகளாக இருக்கிறார்கள் என்னும் எண்ணத்துடனும் எல்லோரும் மரித்துப் போவார்கள் என்றும் எண்ணத்துடனும் இந்த ஆலோசனை கொடுக்கப்பட்டிருக்கிறது. (பிர 9:2-3). கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் அளவுக்குத் தகுந்த பிரகாரமே புசித்துக் குடிப்பார்கள்.

பிரசங்கி – தொகுப்புரை

9 அதிகாரம்

குடித்து வெறித்திருப்பதைச் சுவிசேஷம் கடிந்து கூறுகிறது. (1கொரி 6:9-11; கலா 5:19-21) நாம் பூமிக்குரிய காரியங்களில் பிரியம் வைக்காமல் பரலோகக்காரியங்களில் பிரியம் வைக்க வேண்டும். (கொலோ 3:1-3) இந்த உலகத்தில் நாம் அவபக்தியையும், உலக சிநேகத்தையும் வெறுத்து, நீதியாகவும், தேவபக்தியுடனும் ஜீவிக்க வேண்டும். (தீத்து 2:11-13; எபி 12:14). சாலொமோன் புசிப்பதையும், குடிப்பதையும் வலியுறுத்திக் கூறுவதுபோல நாம் அவற்றை வலியுறுத்தாமல் இருப்பது நமக்கு நல்லது. (பிர 9:7; பிர 2:24; பிர 3:13; பிர 5:18; பிர 8:15).

"உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும்" - கிழக்கு தேசத்தில் வெண்வஸ்திரங்களை விரும்பி அணிந்தார்கள். ஒருவருடைய தூய்மையான நடத்தைக்கும், சுபாவத்திற்கும் வெண்மை நிறம் ஓர் அடையாளமாகும். (வெளி 7:13; வெளி 19:14).

"நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி" - (1கொரி 7:1-5).

IX. ஞானமும், புத்தியீனமும்

1. ஞானத்திற்கு சமமில்லாமல் கொடுக்கப்படும் வெகுமதி - (9:11-10:20)

பிர 9:11 நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது: ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிடவேண்டும்.

பிர 9:12 தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்.

பிரசங்கி கண்டுபிடித்த காரியங்கள்

1. ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகம் போதாது. (பிர 9:11).
2. யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது.
3. பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானம் போதாது.
4. ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தி போதாது.
5. தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவு போதாது.
6. தன் மரிக்கும் காலத்தை மனுஷன் அறியான். (பிர 9:12).
7. பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் (பிர 9:13-16).
8. ஏழை செய்த பெரிய உதவியை யாரும் போற்றுவதில்லை. (பிர 9:15).
9. ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்படும். (பிர 9:16).
10. ஞானிகளின் வார்த்தைகளை மூடர் கேட்பதில்லை. (பிர 9:17).
11. யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம். (பிர 9:18).
12. பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்.

2. வலிமையைவிட ஞானம் நலம்

பிர 9:13 சூரியனுக்குக் கீழே ஞானமுள்ள காரியத்தையும் கண்டேன்; அது என் பார்வைக்குப் பெரியதாய்த் தோன்றிற்று.

பிரசங்கி - தொகுப்புரை

9 அதிகாரம்

பிர 9:14 ஒரு சிறு பட்டணம் இருந்தது, அதிலே இருந்த குடிகள் கொஞ்ச மனிதர்; அதற்கு விரோதமாய் ஒரு பெரிய ராஜா வந்து, அதை வளைந்துகொண்டு, அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான்.

பிர 9:15 அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை.

பிர 9:16 ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற் போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்.

பிர 9:17 மூடரை ஆளும் அதிபதியின் கூக்குரலைப் பார்க்கிலும் ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத்தக்கவைகள்.

பிர 9:18 யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம்; பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்.

10 அதிகாரம்

3. பேர்பெற்றவர்களின் புத்தியீனம்

பிர 10:1 செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.

"செத்த ஈக்கள்" - இதற்கு செத்துப்போன ஈக்கள் அல்லது மரணத்தை உண்டுபண்ணும் ஈக்கள் என்று பொருள். மூடி வைக்காத போஜனப்பதார்த்தங்களையும், பரிமள தைலத்தையும் ஈக்கள் கெடுத்துவிடும். அதுபோலவே மூடனுடைய சொற்ப மதியீனமும் ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைத் தாழ்மையடையச் செய்யும்.

"தைலக்காரன்" - (யாத் 30:25,35; யாத் 37:29; 2நாளா 16:14; நெகே 3:8).

4. ஞானத்தை நடத்தையினால் அறிந்துகொள்ளலாம்

பிர 10:2 ஞானியின் இருதயம் வலதுகையிலும், மூடனின் இருதயமோ இடதுகையிலும் இருக்கும்.

பிர 10:3 மூடன் வழியிலே நடக்கிறபோதும் மதி கெட்டவனாயிருக்கிறான்; தான் மூடனென்று அவன் எல்லாருக்கும் சொல்லுகிறான்.

"ஞானியின் இருதயம் வலதுகையிலும்" - தேவைப்படும் போது உதவி புரிவதற்கு ஏதுவாக ஞானியின் இருதயம் ஆயத்தமாக இருக்கும். ஆனால் மூடனுடைய இருதயமோ தேவைப் படும்போது உதவாது. (பிர 10:2-3).

5. ஞானம் வலிமையைவிட நல்லது

பிர 10:4 அதிபதியின் கோபம் உன்மேல் எழும்பினால் உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே; இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும்.

6. பேர்பெற்றவர்களிடம் புத்தியீனம்

பிர 10:5 நான் சூரியனுக்குக்கீழே கண்ட ஒரு தீங்குண்டு, அது அதிபதியினிடத்தில் தோன்றும் தப்பிதமே.

பிர 10:6 மூடர் மகா உயர்ந்த நிலையில் வைக்கப்படுகிறார்கள்; சீமான்களோ தாழ்ந்த நிலையில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

பிர 10:7 வேலைக்காரர் குதிரைகள்மேல் ஏறிப்போகிறதையும், பிரபுக்கள் வேலைக்காரர் போல் தரையிலே நடக்கிறதையும் கண்டேன்.

அதிபதி செய்யும் தப்பிதங்கள்

1. மூடரை மகா உயர்ந்த நிலையில் வைக்கிறார்கள்.
2. சீமான்களை தாழ்ந்த நிலையில் உட்கார வைக்கிறார்கள்.
3. வேலைக்காரரை உயர்த்துகிறார்கள். (பிர 10:7)
4. பிரபுக்களைத் தாழ்த்துகிறார்கள்.

7. பிரயாசத்தைவிட ஞானம் நல்லது

பிர 10:8 படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்; அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும்.

பிர 10:9 கல்லுகளைப் பேர்க்கிறவன் அவைகளால் காயப்படுவான்; மரத்தைப் பிளக்கிறவன் அதினால் மோசப்படுவான்.

பிர 10:10 இரும்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிக பலத்தைப் பிரயோகம்பண்ணவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்.

10 அதிகாரம்

காயப்படுவதற்கு வாய்ப்புக்கள்

1. படுகுழியை வெட்டுவது.
2. அடைப்பைப் பிடுங்குவது.
3. கல்லுகளைப் பேர்ப்பது. (பிர 10:9)
4. மரத்தைப் பிளப்பது.

8. ஞானியும் மூடரும்

பிர 10:11 தடைகட்டப்படாத பாம்பு கடிக்குமே, அலப்புவாயனும் அதற்கு ஒப்பானவன்.

பிர 10:12 ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்; மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும்.

பிர 10:13 அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம்.

பிர 10:14 மூடன் மிகுதியாய்ப் பேசுகிறான், நடக்கப்போகிறது இன்னதென்று மனுஷன் அறியான்; தனக்குப்பிற்பாடு சம்பவிக்கப் போகிறதை அவனுக்கு அறிவிப்பவன் யார்?

பிர 10:15 ஊருக்குப் போகும் வழியை மூடன் அறியாததினால், அவன் தொல்லை ஒவ்வொருவரையும் இளைக்கப் பண்ணும்.

ஒப்புமைகள்

1. பாம்பும், அலப்புவாயனும் (பிர 10:11)
2. ஞானியினுடைய வாய்மொழிகளும், மூடனுடைய வாய்மொழிகளும் (பிர 10:12)
3. மூடனுடைய வார்த்தைகளின் துவக்கமும், முடிவும் (பிர 10:13)

மூடவனுடைய சுபாவம்

1. மூடன் மிகுதியாய்ப் பேசுகிறான். (பிர 10:14)
2. ஊருக்குப் போகும் வழியை மூடன் அறியாதிருக்கிறான். (பிர 10:15)

9. பேர்பெற்றவர்களிடம் புத்தியீனம்

பிர 10:16 ராஜா சிறுபிள்ளையுமாய், பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, உனக்கு ஐயோ!

பிர 10:17 ராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களு மாயிருக்கப்பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது.

பிர 10:18 மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப் பழுதாகும்; கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்.

பிர 10:19 விருந்து சந்தோஷத்துக் கென்று செய்யப்படும்; திராட்சரசம் ஜீவனுள்ளோரைக் களிப்பாக்கும்; பணமோ எல்லாவற்றிற்கும் உதவும்.

பிர 10:20 ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே; ஆகாயத்துப் பறவை அந்தச் சத்தத்தைக் கொண்டு போகும், செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும்.

தேசத்தின்மீது "ஐயோ" வரும் சமயம்

1. ராஜா சிறுபிள்ளையாய் இருக்கும்போது
2. பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களாய் இருக்கும்போது.

தேசத்தின்மீது "பாக்கியம்" வரும் சமயம்

1. ராஜா குலமகனாய் இருக்கும் போது.
2. பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களாய் இருக்கும்போது.

பிரசங்கி - தொகுப்புரை

10 அதிகாரம்

சாலொமோன் கவனித்து உணர்ந்த காரியங்கள்

1. மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப் பழுதாகும்.
2. கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்.
3. விருந்து சந்தோஷத்துக்கென்று செய்யப்படும். (பிர 10:19).
4. திராட்சரசம் ஜீவனுள்ளோரைக் களிப்பாக்கும்.
5. பணமோ எல்லாவற்றிற்கும் உதவும்.

செய்யக்கூடாத காரியங்கள்

1. ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே.
2. ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே.

11 அதிகாரம்

X. நல்ல ஆலோசனை - (11:1-12:14)

1. எல்லா மனுஷருக்கும்

பிர 11:1 உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.

பிர 11:2 ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு; பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது.

பிர 11:3 மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின்மேல் பொழியும்; மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும்.

"உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு" - ஆசீர்வதிக்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் வரும். (பிர 11:1) பிறருக்கு உதவி புரிகிறவர்களுக்கு உதவி கிடைக்கும். போஜனத்தை ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு என்று பிர 11:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் கொடுக்கிறவனுக்கு எப்போது தேவை உண்டாகும் என்றும், தனக்கு உதவி யார் மூலமாக வரும் என்றும் அவனுக்குத் தெரியாது.

2. விவசாயிகளுக்கு ஆலோசனை

பிர 11:4 காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்.

பிர 11:5 ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்.

பிர 11:6 காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே.

"காலையிலே உன் விதையை விதை" - வேலை செய்து சம்பாத்தியம் பண்ணி, தன்னையும் பராமரித்து பிறருக்கும் உதவி புரிய வேண்டும். சரியான காலத்தில் ஒருவன் விதை விதைக்கவில்லையென்றால், அவன் தரித்திரனாவான். இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டு சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாக வேலை செய்கிறவனைக் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

3. வாலிபருக்கு ஆலோசனை

(1) மற்றவர்களுடைய அனுபவங்களிலிருந்து ஆதாயம்

பிர 11:7 வெளிச்சம் இன்பமும், சூரியனைக் காண்பது கண்களுக்குப் பிரியமுமாமே.

பிர 11:8 மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்க வேண்டும்; அவைகள் அநேகமாயிருக்கும்; வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே.

"வெளிச்சம் இன்பமும்" - மனுஷனைச் சந்தோஷப்படுத்துவதற்காகக் கர்த்தர் பல காரியங்களை உண்டாக்கியிருக்கிறார். அதற்கான நாம் சந்தோஷப்பட்டு கர்த்தரைத் துதிக்க வேண்டும். (பிர 11:7-8)

(2) வரப்போகும் நியாயத்தீர்ப்பை எதிர்பார்த்து ஜீவிக்க வேண்டும்

பிர 11:9 வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.

பிரசங்கி - தொகுப்புரை

11 அதிகாரம்

பிர 11:10 நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு; இளவயதும் வாலிபமும் மாயையே.

"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு" - வாலிபன் தன்னுடைய இருதயத்தின் ஆசைகளின்படியும், கண்களின் இச்சைகளின்படியும் ஜீவிக்கக்கூடாது. தன்னுடைய எல்லாச் செயல்களுக்கும் அவன் கணக்கொப்புவிக்க வேண்டும். ஆகையினால் அவன் தன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், தன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போட வேண்டும். (பிர 11:9-10). வாலிபப் பிராயத்தில் சிருஷ்டிகரை நினைக்க வேண்டும். (பிர 12:1).

12 அதிகாரம்

(3) தேவனை நினைக்கவேண்டும் - காரணங்கள்

பிர 12:1 நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்,

பிர 12:2 சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்குமுன்னும்,

"தீங்குநாட்கள்" - முதிர்வயது, பாடுகள், மரணம் ஆகியவை சம்பவிக்கும் நாட்கள் தீங்கு நாட்களாகும். (பிர 12:1-7) பூமியில் மனுஷன் கடைசியாக இக்காலத்தில் சோதிக்கப்படுகிறான். ஆகையினால் இது தீங்கு நாட்கள் என்று அழைக்கப்படுகிறது. மனுஷன்தன்னுடைய முதிர்வயதில் தான் வாழ்ந்த நாட்களை ஆராய்ந்து பார்க்கிறான். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள பிரயாசப்படுகிறான்.

தான் இன்னும் எத்தனை வருஷம் உயிரோடு இருப்பான் என்பது எவனுக்கும் தெரியாது. ஆகையினால் அதிகமான சந்தோஷங்களைத் தவிர்த்துவிடுகிறான். தன்னுடைய பேச்சிலும், செயலிலும் நித்திய ஜீவனுக்கேற்ற காரியங்களில் ஈடுபடுகிறான். மனுஷன் பூமியில்தான் இரட்சிக்கப்பட முடியும். மரித்த பின்பு இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்பில்லை. மரணத்திற்குப் பின்பு அவனுடைய நியாயத்தீர்ப்பே அவனை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறது. 2கொரி 5:9-10; வெளி 20:11-15).

மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டவர்களால் மட்டுமே பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியும். (மத் 18:3; யோவான் 3:3-5) மனுஷன் புதிய சிருஷ்டியாக மாற வேண்டும். மரிக்கும் வரையிலும் கர்த்தரைப் பிரியப்படுத்தும் விதமாக ஜீவிக்க வேண்டும். (2கொரி 5:17-18; தீத்து 2:11-13; எபி 12:14). சுவிசேஷம் ஆபிரகாமிற்கும், (கலா 3:8), இஸ்ரவேலர் அனைவருக்கும் (எபி 4:2) அறிவிக்கப்பட்டிருந்தது. ஆபிரகாமிற்கு முன்பாக ஆதாமின் காலத்திலிருந்தே ஜனங்கள் விசுவாச வாழ்க்கையைப் பற்றி தெரிந்து வைத்திருந்தார்கள். (எபி 11) ஆகையினால் இக்காலத்தில் ஜீவிக்கும் நமக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிடமுடியாது. (ரோமர் 2:12-16; 1யோவான் 1:7). கர்த்தருடைய ஒளியைப் பெறாதவர்கள்கூட தங்களுடைய மனச்சாட்சியின் பிரகாரம் நியாயந்தீர்க்கப் படுவார்கள்.

(4) மரணம் உறுதியானது என்பதை நினைவுகூரவேண்டும் - மனுஷனுடைய சரீரம், மரணம் ஆகியவற்றின் பதினெட்டு அம்சங்கள்

பிர 12:3 மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வராததற்குமுன்னும், வீட்டுக் காவலாளிகள் தள்ளாடி, பெலசாலிகள் கூனிப்போய், ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து, பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டுபோகிறதற்கு முன்னும்,

பிர 12:4 ஏந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு, குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி, கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப் போகாததற்குமுன்னும்,

பிர 12:5 மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி, வாதுமைமரம் பூப்பூத்து, வெட்டுக்கிளியும் பாரமாகி, பசித்தீபனமும் அற்றுப் போகாததற்கு முன்னும், மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதினாலே, துக்கங் கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்குமுன்னும்,

பிர 12:6 வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி,

12 அதிகாரம்

பிர 12:7 இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை.

முதுமையையும், மரணத்தையும் பற்றிய விளக்கம்

1. வீட்டுக் காவலாளிகள் தள்ளாடுவது. (மனுஷனுடைய கைகள்) (பிர 12:3)
2. வீடு (மனுஷனுடைய சரீரம்)
3. பெலசாலிகள் கூனிப்போவது. (மனுஷனுடைய கால்கள்)
4. ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து போவது. (பற்கள்)
5. பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டுபோவது. (கண்களின் பார்வை மங்குவது)
6. தெருவாசலின் கதவுகள் அடைபட்டுப் போவது. (செவி கேட்க முடியாமல் மந்தமாவது) (பிர 12:4)
7. ஏந்திர சத்தம் தாழ்ந்துபோவது.
8. குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியது. (தூக்கம் வராமல் விழித்திருப்பது)
9. மேட்டுக்காக அச்சமுண்டாவது. (கர்த்தரைச் சந்திக்கப் பயப்படுவது) (பிர 12:5)
10. வழியிலே பயங்கள் தோன்றுவது. (மரண பள்ளத்தாக்கில் நடப்பதற்குப் பயப்படுவது)
11. வாதுமைமரம் பூப்பூப்பது. (தலைமுடி நரைப்பது)
12. வெட்டுக்கிளியும் பாரமாவது. (எந்தச் சுமையும் சுமக்க முடியாமல் பலவீனமாவது)
13. பசித்தீபனமும் அற்றுப்போவது. (போஜனஆசை ஒழிவது)
14. வெள்ளிக்கயிறு கட்டுவிடுவது. (முதுகுத்தண்டு வளைவது) (பிர 12:6)
15. பொற்கிண்ணி நசுங்குவது (மண்டைஓடு பலவீனமானது)
16. ஊற்றின் அருகே சால் உடைவது. (இருதயம் சரியாக இயங்காமல் இருப்பது)
17. மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்புவது. (சரீர மரணம்) (பிர 12:7; ஆதி 3:19)
18. ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போவது. (பிர 12:7; ஆதி 2:7; எபி 12:9)

"மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறது" - (வெளி 21-22).

"இவ்விதமாய்" - ஆதியில் தேவன் ஆதாமை மண்ணிலிருந்து உண்டாக்கிய சம்பவம் இங்கு கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 2:7).

"தேவனிடத்திற்கு மறுபடியும் போவது" - சரீர மரணத்திற்குப் பின்பு எல்லா ஆத்துமாக்களும், ஆவிகளும் தேவனுடைய பராமரிப்பில் இருக்கும். ஏற்கெனவே மரித்துப்போனவர்களுடைய (யாக் 2:26) ஆவிகளும், ஆத்துமாக்களும் பாதாளத்திலோ (ஏசா 14:9; லூக்கா 16:19-31), அல்லது பரலோகத்திலோ (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11) தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:9-10; வெளி 20:11-15) அவர்கள் தங்களுடைய நித்தியத்தை எங்கே செலவிட வேண்டுமென்று கர்த்தரே தீர்மானிப்பார்.

(5) ஞானிகளின் வாக்கியங்களுக்கு செவிகொடுக்க வேண்டும்

பிர 12:8 மாயை மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

பிரசங்கி - தொகுப்புரை

12 அதிகாரம்

பிர 12:9 மேலும், பிரசங்கி ஞானவானாயிருந்தபடியால், அவன் ஜனத்துக்கு அறிவைப் போதித்து, கவனமாய்க் கேட்டாராய்ந்து, அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான்.

பிர 12:10 இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க பிரசங்கி வகை தேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள்.

பிர 12:11 ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக் கோல்கள் போலவும் சங்கத் தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள் போலவும் இருக்கிறது; அவைகள் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது.

பிர 12:12 என் மகனே! இவைகளினாலே புத்தியடைவாயாக; அநேகம் புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு.

"மாயை மாயை, எல்லாம் மாயை" - (பிர 1:2).

பிரசங்கியின் கிரியை

1. அவன் ஜனத்துக்கு அறிவைப் போதித்தான். (பிர 12:9).
2. கவனமாய்க் கேட்டாராய்ந்தான்.
3. அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான்.
4. இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வகைதேடினான் (பிர 12:10).

"ஒரே மேய்ப்பன்" - இந்த வார்த்தை கர்த்தரைக் குறிக்கும். (பிர 12:10-11; 2தீமோ 3:16-17).

"இவைகளினாலே புத்தியடைவாயாக" - சத்திய வார்த்தைகளினால் புத்தியடைய வேண்டும். (பிர 12:10).

நடைமுறை உண்மை

1. அநேகம் புஸ்தகங்களை உண்டு பண்ணுகிறதற்கு முடிவில்லை.
2. அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு.

(6) காரியத்தின் கடைசித்தொகை

பிர 12:13 காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.

பிர 12:14 ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

காரியத்தின் கடைத்தொகை

1. மனுஷன் தேவனுக்குப் பயப்படவேண்டும்.
2. மனுஷன் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.
3. மனுஷன் தன்னைத் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். (பிர 12:14; மத் 16:27; 2கொரி 5:9-10; வெளி 20:11-15)